
# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 16 ஞாயிற்றுக்கிழமை (03-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:266


# முல்லைத்தீவுக் கடற்பரப்பில்
# நேற்று 5 மணி நேரம் சமர்!



அலரி மாளிகையில் தொடங்கி இப்ப கனத்தையில் போய் நிக்குது பாருங்கோ...!

## இழப்புக் குறித்து தகவல் இல்லை

கொழும்பு, ஒக்ரோபர் 3

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் பெரும் கடற்சமர் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை 1.20 மணி தொடக்கம் 6 மணி வரை சுமார் 5 மணித்தியாலங்கள் வரை இந்தச் சமர் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

முல்லைத்தீவுக் கடற்பரப்பிலிருந்து 40 மைல் தொலைவில் கரைக்கு சமீபமாக விடுதலைப் புலிகளின் நான்கு வள்ளங்களை அவதானித்த கடற்படையினர் டோறா படகுகளிலிருந்து தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் — இந்தச் சண்டையின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காட்டுக்குள் எலும்புக்கூடுகள்

கொழும்பு, ஒக். 3

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கங்கராயக்குளம் காட்டுப் பகுதியில் இரு எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

விறகு வெட்டுவதற்கு இந்தக் காட்டுக்குச்சென்ற பொதுமக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து பொலீஸார் இந்த எலும்புக்கூடுகளை மீட்டனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் இப்பகுதியில் விறகு வெட்டச் சென்று காணாமல்போன எஸ். சுகுமார் (வயது-22), எம்.கோபிநாத் (வயது-36) ஆகியோரின் எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவலர் காயம்

மட்டக்களப்பு, ஒக். 3

மூதூர் பிரதேசத்திலுள்ள பட்டிருப்புக் கிராமத்தில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஊர்காவல்படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலில் எஸ். பலீல் (வயது 20) என்ற ஊர்

(12 ஆம்பக்கம் பார்க்க)

## 25 தமிழர் கைது

கொழும்பு ஒக். 3

தம்புள்ளப் பகுதியில் நேற்று முன்தினம் 25 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா, மட்டக்களப்பு, நுவரெலியா, மாத்தளை, திருகோணமலை போன்ற இடங்களைச் சேர்ந்த தமிழர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். (இ-5)

## போராட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 3

கடந்த இரண்டு வாரங்களாக பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நடத்தி வந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட பாடசாலைகளில் பகுதி நேரமாக கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஏறாவூர் டிப்போவில் நேற்று குண்டுவெடிப்பு

## இரு பஸ்கள் சேதமடைந்தன

மட்டக்களப்பு, ஒக். 3

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் ஏறாவூர் டிப்போவில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இரு பஸ்கள் சேதமடைந்தன.

டிப்போ வளவுக்குள் திருத்த வேலைகளுக்காக மூன்று நாள்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து டிப்போவுக்கு விரைந்து சென்ற பொலீஸார் குண்டு வெடிப்பின் போது கடமையிலிருந்த ஆறு ஊழியர்களைக் கைது செய்து விசாரணையின் பின்னர் விடுவித்தனர். (இ-5-21)

## இறுதிக்கிரியை நடத்த கனத்தையில் தடை!

கொழும்பு, ஒக். 3

கொழும்பு கனத்தை மயானத்தில் இறுதிக்கிரியைகளை நடத்துவதற்கு இன்று நண்பகல் வரை படையினர் தடை விதித்துள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் கனத்தையில் இன்று நடைபெற உள்ளதை அடுத்தே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் என படையினர் தெரிவித்தனர்

இராணுவத்தின் 50 ஆவது ஆண்டுக்கொண்டாட்டங்களில் இராணுவத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சோதனை நிலையம் மீது தாக்குதல்

திருகோணமலை ஒக். 03

திருகோணமலை அனுராதபுரம் சந்திப் பகுதியில் உள்ள பொலீஸ் சோதனை நிலையம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் பொலீஸ் சார்ஜன்ட் ராஜபக்ஷ (வயது 36) என்பவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார் என்றும் —

மேலும் மூன்று பொலீஸார் காயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

பாதுகாப்பு அமைச்சின்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கடந்த கால தவறுக்கான பொறுப்பை ஏற்கிறேன் என்கிறார் சித்தார்த்தன்

## வைரவப்புளியங்குளத்தில் நேற்று பத்திரிகையாளர் மாநாடு

வவுனியா, ஒக். 3

கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுக்கான தார்மீகப் பொறுப்பை புளொட்டின் தலைவரான நானே ஏற்றுக்கொள்கிறேன்.

இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் நேற்று வவுனியாவில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் அமைந்துள்ள புளொட் அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் புளொட் உப-தலைவர் என். மாணிக்கதாசன் கொல்லப்பட்டதன் பின் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி சித்தார்த்தன் விளக்கிக் கூறினார்.

அவர் கூறியதாவது:-

கடந்த காலங்களில் சில தவறுகள் நடந்துள்ளன. தவறுகளைத் திருத்தி வவுனியாவில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

ஏனைய இயக்கங்களுடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் காரணமாக மோதல்கள் ஏற்பட்டன. இந்தக் கருத்துவேறுபாடுகளைப் பேச்சுவார்த்தை மூலம் நீக்கிச் சகோதர அமைப்புகளுடனான மோதல்களை நிறுத்தி தமிழ்மக்களின் விடுதலைக்காகக் கூட்டாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்துக்கு எதிராக கண்டியில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 3

யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளைக் கண்டித்து நேற்றுக் கண்டியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸும் புதிய இடதுசாரி முன்னணியும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

கண்டி தலதா வீதியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஊர்வலம் நடத்த பொலீஸார் தடை விதிப்பு

மன்னார். ஒக். 3

கடந்த மாதம் 4 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள மன்னார் அரச அதிபர் எஸ். எம். குரூஸை விடுதலை செய்யக்கோரி இன்று மன்னார் நகரில் நடைபெற இருந்த ஊர்வலத்துக்கு பொலீஸார் அனுமதி அளிக்க மறுத்துள்ளனர்.

அவசரகாலசட்ட நடைமுறைகளுக்கு அமைய இந்த ஊர்வலத்துக்கு அனுமதி வழங்க முடியாதென பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரஜைகள் குழு, வாழ்வோதயம் ஆகியன இணைந்து இந்த ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்திருந்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சி அமைப்பாளர் வீடு மீது குண்டுத் தாக்குதல்

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, ஒக்.3

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ராஜன் மயில்வாகனத்தின் நாவற்குடா இல்லம் மீது நேற்று முன்தினம் இரவு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து அந்த வீட்டில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

(12 ஆம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## ஓடியோ, வீடியோ C. Dகள் விற்பனைக்கு

புதிய ஓடியோ CD, படப்பாடல்கள்
புதிய பக்திப் பாடல்கள், புதிய வீடியோ
CD, இசைத் தென்றல் (புதியது)
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
154, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9164)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகலிங்கம் அன்னம்மா

புகையிரத நிலைய வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவி அன்னம்மா [02-10-99] சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவி, சிவலிங்கம், விமலாதேவி, பவளம் ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமநாதன், லலிதா, தம்பிப்பிள்ளை, சிவநேசன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [03-10-99] ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

விலாசம்:
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

தகவல்;
இ. சிவநேசன்
சைக்கிள் கடை

(69603)

## திருமதி சுப்பிரமணியம் கனகம்மா

சங்கத்தானை தட்டாதெருவைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் கனகம்மா நேற்று (2-10-99) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் அன்னலட்சுமி, கௌரியம்மா, வசந்தகோகிலம், கோணேஸ்வரி, கோமளேஸ்வரி, ராஜேஸ்வரி, யோகசிங்கம், மகேந்திரன், பாலன் (வான்மதி நகைமாளிகை உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-10-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. பாலன்
(மகன்)

வான்மதி நகைமாளிகை,
சாவகச்சேரி.

(69600)

## திருமதி மனோன்மணி நடராசா

(நாவலடி, புலோலி மத்தி, பருத்தித்துறை)

அன்னார் மாணிக்கம் நடராசாவின் அன்பு மனைவியும், தங்கவேலாயுதம், சுப்பிரமணியம் (ஆசிரியர் விபுலானந்தா மகா வித்தியாலயம் வவுனியா), மகேந்திரம் (நோர்வே), நவரத்தினராசா (நோர்வே), சிவானந்தம் (நோர்வே), சிவமலர், ராணிமலர் (நோர்வே), ராஜினி, சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ப. செல்வவிநாயகம் (ஆசிரியர் யா/புலோலி மெ. மி, த. க. பாடசாலை), திருமதி சு. கலையரசி (ஆசிரியை விபுலானந்த மகாவித்தியாலயம் வவுனியா) ஜெயகுமாரி (நோர்வே), கலைச்செல்வி (நோர்வே), சுமதி, கோமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆர்த்திகா, ஐங்கரபாசன், கஜானவைகுந்தன், லம்போதரன், வித்திகா, வினோதினி, தர்ஷினி, சிவாகரன், ஜெயருபன், ரயூபன், பவித்திரன், வஜித்தா, மயூரி, பபிகரன், கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (4-10-99) திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு சுப்பர்மடம், பருத்தித்துறை மயானத்தில் நடைபெறவுள்ளது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
திரு. ப. செல்வவிநாயகம்
மருமகன்

நாவலடி,
புலோலி மத்தி,
பருத்தித்துறை,

(69579)

## திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா

[இளைப்பாறிய ஆசிரியை - சாவ. இந்துக் கல்லூரி]

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், நுணாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா 28 - 09 - 99 அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரஸ்வதி [சரசா], ஸ்ரீஸ்காந்தன் (லண்டன்), நித்தியானந்தசிவம் [ஆனந்தி] [லண்டன்], ராஜ்வேல் [லண்டன்] ஆகியோரின் பாசமிகு தாயாரும் நந்தினி [லண்டன்], அரசகுமாரி [லண்டன்], நாமகள் [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் [அச்சுவேலி] அன்புச் சகோதரியும் டசாமிளா, சரா, சயன், நித்தியன், தாரணி, திவாகரி, தாரங்கா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (3 - 10 - 99) லண்டனில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. சிவகோசரி (சிவா)
[மருமகன்]

நுணாவில் கிழக்கு,
கல்வயல் வீதி,
சாவகச்சேரி.

[சி/9166]


எமது
புதிய ஓடியோ CD
வெளியீடுகள்!

ஊட்டி
மானசீகக் காதல்

**கஜமுகா
ரேட் சென்ரர்**
281, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. 2049

(69597)



A/L 2001 - கணக்கீடு
தொங்கல் கணக்கு
ஆரம்பம்:- 04 - 10 - 99
3-30 p. m.
Mr. பாலவாசன்
**SHAMROCK**
(சி/9165)



**நாகம்ஸ்**
**சுன்னாகம்**

சரத்குமார் - வினித்தா
சுகன்யா - கவுண்டமணி
நடித்த
**மகாபிரபு**
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(69521)



**ராஜா**
**யாழ்ப்பாணம்**
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
**பாண்டியன்**
10-30, 2-00, 5-00
8 ஆம் திகதி முதல்
**ரோஜாவைக் கிள்ளாதே**
(சி/9103)



**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
பிரசாந், சிம்ரான்
நடித்த
ஜோடி
[புதிய வெளியீடு]
காட்சிகள்: 10-30, 2-30
T P No. 070-212223
(69521)




## பட்டமளிப்பு விழா அலங்காரம் (MAKE-UP)

யாழ். பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் பெண் பட்டதாரிகளுக்கான சிகையலங்காரம், ஆடையலங்காரம் செய்து கொடுக்கப்படும். 5-10-99இற்கு முந்தியபதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு:- **பாமி பியூற்றிஷன்**
திரு. சிவபூசம் யோகன்
நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு.
(69599)


## சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
## த. சோ. பொன்னுத்துரை

பிறப்பு 06 08-1918 இறப்பு 17-09-1999

எங்கள் பாசமிகு தந்தையே!
தங்கள் பாசத்தினையும் பரிவையும் பாசத்துடன் தேடுகிறோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம.

எமது அன்புத் தந்தையின் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டு உதவிகள் செய்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றிகள் இன்று ஞாயிறு (03—10—1999) பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ள சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொ. இராசம்மா -- பிள்ளைகள்.

59/1, அரச வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[69589]

## யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
# பரிசளிப்புவிழா - 1999

★★★ ++++++++++ ★★★

இடம்: ஷ பாடசாலை மண்டபம்
காலம்: **03--10--1999** ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணி
தலைவர்: திரு. க. சி. பகவத்சிங்கம் (அதிபர்)
பிரதம விருந்தினர்: திரு. இ. சிவஞானசுந்தரம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய்ப் பிரிவு, யாழ். வலயம்)
சிறப்பு விருந்தினர்: திருமதி ஞா. தெய்வேந்திரராஜா
(உதவிக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் பிரிவு, யாழ். வலயம்)
கௌரவ விருந்தினர்: திரு. வே பரிமேலழகர்
(முதன்மை ஆசிரியர் ஆங்கிலம், கோப்பாய்ப் பிரிவு, யாழ். வலயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.


விளம்பர அன்பளிப்பு:

**ஸ்ரீகிருஷ்ணா தொலைத் தொடர்பு சேவை** **ஸ்ரீகிருஷ்ணா கிறைண்டிங் மில்**

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி.
உள்ளூர் தொலைபேசி இல. 07Ｊ -- 212411
வெளியூர் தொலைபேசி இல. 0094 -- 70 212411

(69593)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் முருகேசு மகேஸ்வரி

மண்ணுலகில் 16 – 05 – 1926
விண்ணுலகில் 30 – 08 – 1999

எமது குடும்ப ஒளிவிளக்காயிருந்து எம்மையெல்லாம் வழிநடத்திய எமது அன்புத் தெய்வம் திருமதி முருகேசு மகேஸ்வரி அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் எமது இல்லத்தில் இன்று (03-10-1999) ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''மகேந்திரம்''
வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

(69554)

# இசைவிழா -- 1999
# நியூ வீணா கானம்

இசை நிறுவனம்

காலம்: **03-10-1999** ந. பகல் 1.30 [S.L,T]

இடம்: நியூ வீணா கானம்

ஆசியுரை வழங்குபவர்:
செல்வி கிருஷ்ணவேணிமயில்வாகனம் (I.S.A.)

பிரதம விருந்தினர்:
திருமதி சிவப்பிரகாசம் ஜோகேஸ்வரி
[முகாமையாளர் மக்கள் வங்கி, கன்னாதிட்டி]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

[69545]

## வவுனியாவில் திடீர்த் தேடுதல்

வவுனியா, ஒக். 3

வவுனியா நகரில் நேற்று முன்தினம் நண்பகல் அதிரடிப் படையினர் திடீர்த்தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கை காரணமாக நகரில் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

இந்தத் தேடுதலில் எவரும் கைது செய்யப்படவில்லை. (உ-3)

## நெல் விதைப்பு ஆரம்பம்

சுன்னாகம், ஒக். 3

பருவமழை ஆரம்பித்திருப்பதைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் வயல்விதைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மழை தொடர்ந்து பெய்வதால் வயலில் நீர் நிற்பதால் சில இடங்களில் உழவு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ-27)

## நியமனம்

வடமராட்சி, ஒக். 3

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ். அமரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு இடமாற்றம் பெற்று வந்த இவர், பல மாதங்களாக இங்கு கடமையாற்றி வந்தார்.

தற்போது இவர் சுகாதார வைத்திய அதிகாரியாக இம் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். [173]

## தடை தளர்வு

மட்டக்களப்பு, ஒக். 3

மட்டக்களப்பு நகரில் இருந்து புறநகர்ப் பகுதிகளுக்கு பட டிருப்புப் பாலம் ஊடாக வாகனங்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முன்தி ம் தொடக்கம்தளர்த்தப்பட்டுள்ளது.

புறநகர்ப் பகுதியில் தற்சமயம் நெல் விதைப்பு வேலைகள் இடம்பெறுவதாகவும்–

டிராக்டர்கள் அங்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும–

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் செல்வராசா பொலீஸ் அதிகாரிகளைக் கேட்டிருந்தார்

இதைத் தொடர்ந்து டிராக்டர்கள் அந்தப் பாலம் ஊடாகச் செல்ல படையினர் நேற்று அனுமதி வழங்கினர். (உ-3)

# ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் சிறுவர் இல்லம்

உரும்பிராய்

ஏழாலை தெற்கு வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம் நடத்தும் சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தாய் தகப்பன் இல்லாத ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை -- 6 – 12 வரை

விண்ணப்ப முடிவு திகதி -- 1999-10-10

உங்கள் முகவரியுடன் விண்ணப்பப்படிவத்தை அனுப்பவும். விண்ணப்பங்களை கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

ஸ்ரீவசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
வசந்தபுரம், களபாவோடை,
ஏழாலை தெற்கு. ஏழாலை.

[69559]

# பிரிந்தவரின் பிறந்த நினைவுகள்



அமரர்

## Dr. ஆறுப்பிள்ளை இராசநாயகம்

வையகத்தில் 1933-10-03
வானில் 1996-04-19

வையகத்தை நீத்து வானுலகெய்தினாலும்
எங்கள் அன்பு இதயமென் மாளிகையில்
என்றென்றும் நிலைத்திருக்கும்!

பாசமிகு குடும்பத்தினர்.

பானாவெட்டி,
தொல்புரம்.

(69471)

உ
ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப்பிரமனே நம
ஓம் சக்தி

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம்
புரட்டாதி மாதம் 17 ஆம் நாள்
(4-10-1999) திங்கட்கிழமை காலை 9 மணிக்குமேல் வரும்
பூச நட்சத்திரமும் தசமி திதியுடனும்
கூடிய சுபவேளையில்

எமது கனிஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
**சிந்துகா** அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு. க. செல்லத்துரைப் பத்தரும்
குடும்பத்தினரும்

25/8, அரசடி ஒழுங்கை,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(69528)

# கிறிஸ்துவுக்காக இளைஞர் வேத பாட பரீட்சை '99
## கிறிஸ்தவம் (Non R/C)

- ★ ஆண்டு 6 முதல் A/L 2000 ஆம் ஆண்டு வரையான மாணவர்கள் கலந்து கொள்ள முடியும்
- ★ மாணவர்கள் பாடசாலைகளினூடாகவோ அல்லது சபைகளுக்கூடாகவோ தனிநபராகவோ விண்ணப்பிக்கலாம்
- ★ பரீட்சைக் கேள்விகள் ஒவ்வொரு வகுப்பினருக்கும் பாடசாலைப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் அமையும்.
- ★ பரீட்சைத் திகதி: ஒக்ரோபர் 30
- ★ யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் பரீட்சை நிலையங்கள்
- ★ பரீட்சைக் கட்டணம் ஒருவருக்கு 15/– மட்டுமே
- ★ பதிவுகளுக்கான இறுதித் திகதி ஒக்ரோபர் 15
- ★ புள்ளிகளின் அடிப்படையில் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.


மேலும் விவரங்களுக்கு

**கிறிஸ்துவுக்காக இளைஞர்**
462, பிரதான வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்,

(69550)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு 07 — 05 — 1953

உதிர்வு 13 — 10 — 1998

### அமரர் ந. சற்குணானந்தன் (துரை)

திதி: 03 — 10 — 1999

என் அன்புச் செல்வமே!
உன் துணையை நம்பியிங்கு நானிருக்க
இறைவனுக்குத் துணையாகச் சென்றாயோ!
வேராக இருந்தென்னைக் காக்காமல்
வேற்றூரில் எனைவிட்டுப் போனதுமேன்?
பன்னிரண்டு திங்களது போனதுவே
என்னிரண்டு விழிகள் மூடும்வரை மறவேனே.

ஆத்மா சாந்தியடைய வீரபத்திரரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

கைலாயபிள்ளை வீதி,
கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
அன்புத் தாய்.

(சி/9131)

## 24 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 — 08 — 1917

உதிர்வு 03 — 10 — 1975

திருமதி

### மேரி கிருபையம்மா இராஜக்கோன்

பத்து மாதம் சுமந்திருந்து பெற்றாய்;
பகல் இரவாய் விழித்திருந்து வளர்த்தாய்;
வித்தூாய் நாம் வாழ
மேதினியில் வழி அமைத்தாய்.
அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை
அவர் அடி தொழ மறப்பவர் மனிதரில்லை.

அன்புப் பிள்ளைகள்

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

38/9, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(69518)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 — 08 — 1946

மறைவு 03 — 10 — 1998

திருமதி

### றெஜீனா மயில்வாகனம்

ஓராண்டு இன்று! நாளையோ
ஈராண்டின் தொடக்கம்
எத்தனை ஆண்டு ஓடி மறைந்தாலும்
அத்தனை தினமும் உன் நினைவில்.

என்றும் உன் நினைவில்
கணவன், பிள்ளைகள், தாய், தகப்பன்,
தங்கை, மாமி, மைத்துனிமார், மருமக்கள்,
பெறாமக்கள் மற்றும் உறவினர்.

211, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[69526]

## விவசாயக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 3

உதவி விவசாயப் பணிப்பாளராக இருந்து அண்மையில் ஒய்வுபெற்ற த.சிவலோகநாதனுக்கு மீள் நியமனம் வழங்கி திருநெல்வேலியிலுள்ள விவசாயத் திணைக்களத்தின் விதை உற்பத்திக்குப் பொறுப்பாக அவரை நியமிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயக்குழு வடக்கு — கிழக்கு மாகாண விவசாய அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் யாழ். செயலகத்தில் கூடிய இக் குழுவின் கூட்டத்தில் யாழ். மாவட்ட விவசாய விதை உற்பத்தி தொடர்பாக ஆராயப்பட்டது.

திருநெல்வேலியிலுள்ள விவசாயப் பண்ணையில் விதை உற்பத்தி மேற்கொள்வதற்கு விவசாயத்துறையில் அனுபவம் வாய்ந்தவரான த. சிவலோகநாதன் பொறுப்பாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் இவர் தற்பொழுது ஒய்வு பெற்றுள்ளதால் இவரை மீள் நியமனம் செய்யுமாறும் மாகாண அமைச்சிடம் கோருவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

[ஐ-5]

## கால்நடைகளைக் கட்டி வளர்க்கக் கோரிக்கை

வலி-தென்மேற்கு, ஒக். 3

வயல்களில் காலபோக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படடு இருப்பதால் அத்து மீறும் கால்நடைகள் மீது 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் கமநலசேவைகள் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் விவசாய சம்மேளனங்கள் நடவடிக்கை எடுக்கும் என உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ குகநாதன் தெரிவித்தார்.

எனவே கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை — விவசாயக் காணிகளில் கால்நடைகள் அத்து மீறுவது தொடர்பான துண்டுப் பிரசுரம் ஒன்றும் உடுவில் கமநல கேந்திர நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

(இ-185)

## சனசமூக நிலையக் கட்டடம் புனரமைப்பு

நெல்லியடி, ஒக் 3

50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட கோப்பாய் தெற்கு சூரியோதய சனசமூக நிலையக் கட்டடம் இம்மாத நடுப் பகுதியில் திறந்து வைக்கப்படுமென நிலையத் தலைவர் எம். கே. இளையப்பு தெரிவித்தார்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்டிருந்த இக்கட்டடப் புனரமைப்புக்கு ஈ. பி. டி பி. நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியிருந்தார்.

(ஐ-109)


கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
SPOKEN ENGLISH
சி. சடகோபன்
ஆரம்பம்: 05-10-99
(செவ்வாய்) 3.30 P. M.


## கேள்வி அறிவித்தல்

### வலயக் கல்வித்திணைக்களம், தீவகம் - வேலணை

தீவக வலய பாடசாலைகளுக்கு தளபாடங்களை வழங்குவதற்கும். விநியோகிப்பதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விகள் தகுதியுடைய தளபாட உற்பத்தியாளர்கள் விநியோகத்தர்களிடமிருந்து 1999-10-18 ஆம் திகதி முற்பகல் 11 மணிவரை தீவக கல்வி வலயத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்கள். நிபந்தனைகள், மாதிரிப் படங்கள் ஆகியவற்றை கேள்விப் பத்திரக் கட்டணமான ரூபா 250/- வும் மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக ரூபா 2,000/-மும் ஆக மொத்தம் 2,250/- ரூபாவை வங்கிக் கட்டளை மூலம் செலுத்தி உரிய பற்றுச்சீட்டினைப் பெற்று அதனை இத்திணைக்கள களஞ்சியக் கிளையில் சமர்ப்பித்து 1999-10-11 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளலாம். வங்கிக் கட்டளை ''வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்'' என்ற பெயருக்கு பெறப்படல் வேண்டும்.

தேவையான தளபாட விவரம்

1. மாணவர் உருக்கு கதிரை ஏ
2. மாணவர் உருக்கு மேசை சீ
3. அலுவலக மேசை சிறியது
4. தட்டெழுத்தாளர் கதிரை
5. ஆசிரியர் மேசை
6. கைபிடி உள்ள கதிரை
7. கரும்பலகை
8. நீள வகுப்பறை மேசை
9. நீள வகுப்பறை வாங்கு

திரு. ப. விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்
தீவக வலயக் கல்வித்திணைக்களம்,
வேலணை.

[சி/9139]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் S.T. தர்மலிங்கம்

மலர்வு 01 — 06 — 1940

உதிர்வு 03 — 10 — 1997

யாழ். நகர் மக்கள் தலைவரும், அகில இலங்கை சமாதான நீதிவானும், முன்னாள் யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளைத் தலைவருமாகிய S.T. தர்மலிங்கம் அவர்களின் வழி நடத்தலில் கட்சியின் பணி தொடர்வதை என்றென்றும் மறவாத நிர்வாகம் இன்றைய தினம் காலை 9 மணிக்கு அவருடைய திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு இரங்கற் கூட்டம் நடைபெறும்.

இந்நினைவுக் கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

த. தேவகுலநாயகம்
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். செயலாளர்.

இல. 183, 1 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(69541)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தேர்தல் மணி

விரைவில் தேர்தல் ஒன்று வரும் என்று நிலவிய ஊகங்கள் உறுதியாகி உள்ளன. உரிய காலத்துக்கும் பத்து மாதங்கள் இருக்க, எதிர்வரும் ஜனவரி 11-ம் திகதியன்று ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

காலத்துக்கு முந்திய தேர்தலை வைப்பதற்கு காரணங்கள் உள்ளன.

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகக் கூடிய வாய்ப்பு அதிகம் உண்டு. காலம் — மாதங்கள் — செல்ல அந்த நிலைமை மாறிப்போகலாம். அதனால் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் உத்தி ஒரு காரணம்.

இந்த நாட்டின் அரசியல் ஸ்திர நிலைமையில் இலங்கைக்கு நிதி மற்றும் வகை உதவிகளைச் செய்யும் வெளிநாடுகளுக்குத் திருப்தி இல்லை. அத்தோடு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கு தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும். இனப்பிரச்சினையைத் தீர்த்த பின்னரே இலங்கை அரசுக்குக் கூடுதல் உதவிகளைத்தர முடியும் என்றும் அவை சுட்டிக்காட்டி இருக்கின்றன. அதனால் பொதுக் தேர்தலை முதலில் நடத்தி விஷப்பரீட்சை நடத்தாமல், வெற்றிவாய்ப்புள்ள ஜனாதிபதி தேர்தலை முதலில் ஏற்பாடு செய்து ஆட்சியை உறுதி செய்வது இன்னொரு நோக்கம்.

இவ்வருடம் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்துக்கு அமோக வெற்றி கிடைக்கவில்லை. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கிட்டமுட்ட வாக்குகள் விழுந்தன. எனவே ஜனாதிபதித் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்த பின்னர் பொதுத்தேர்தலை நடத்தினால் வெற்றி வாய்ப்பு அதிகமாகும் என்பது இன்னொரு காரணம்.

எப்படியோ, தேர்தல் ஒன்று வந்துவிட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தைச் சற்றுப் பின் தள்ளிவிடலாம். தேர்தலைக் காட்டி அந்த நெருக்கடியில் இருந்து சற்றுத் தூர விலகி அதனைத் தவிர்த்துக் கொள்ளலாம். அத்தோடு இனப்பிரச்சினையை இந்த அரசு தீர்க்கும் என்ற நம்பிக்கையை தமிழர்களிடம் உண்டாக்கும் விதத்தில் சில தேர்தல் தந்திரோபாயங்களை செய்யவும் காலம் கிடைக்கும்.

தேர்தல் மணி அடிக்கப்பட்டதால் விழிப்பாக இருக்க வேண்டியவர்கள் தமிழ்மக்களே. பல தேர்தல்கள் தமிழர்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதிகளோடு நடந்து முடிந்தனவே அன்றி, தெற்கின் தலைவர்கள் எவருமே சொன்னது போலச்செயற்படவில்லை. தமிழர் வாழ்க்கை மேன்மேலும் மோசமடைந்துள்ளதே. அன்றிக் கைக்கு வந்தது எதுவுமில்லை.

கடந்த ஐம்பது வருட காலத்தில் தமிழர்கள் இரண்டாந் தரபிரஜைகளாகி உரிமைகளை மட்டுமன்றி கௌரவத்தையும் இழந்து நாயினும் கடையினராக்கப்பட்டுள்ளனர். இன அழிப்பு, நிலப்பறிப்பு, ஆக்கிரமிக்கப்பட்டோர் என்ற நிலைகளே உருவாகியுள்ளன.

ஆகையால் ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு நோக்குவது, அப்போது எவ்வாறு நடந்து கொள்வது என்பன குறித்து நிதானம், அவதானம் தேவை. சுயநன்மைகள், அரசியல் லாபங்களைக் கைவிட்டு இனத்தின் நலனை முன்னிறுத்த தமிழர்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

# மானிப்பாய் பிரதேச சபையை நகரசபையாக்க கோரிக்கை

மானிப்பாய் பிரதேச சபையை நகரசபையாக்குமாறு கோரும் தீர்மானத்தை வலி தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் கவுன்சில் நிறைவேற்றியது.

கடந்தவாரம் மானிப்பாய் பிரதேச சபைக் கட்டடத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானம் உடன் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்கும், வடக்கு — கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் கடிதமூலம் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதத்திற்கு முன்னர் ஆளுநர் இடம் பெயர்சேவையின் போது மானிப்பாய், நல்லூர், கோப்பாய் பிரதேச சபைகள் விரைவில் நகரசபையாக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஐ-185)

# இன்று நடப்பவை

நவாலி, ஒக். 3

நவாலி சென். பீற்றேர்ஸ் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சென் பீற்றேர்ஸ் ஆலய முன்றலில் பாடசாலை அதிபர் சிறில் சுகந்தரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.மாதவகுமார், நவாலி பங்குத்தந்தை அருட் தந்தை ஏ. பி. அன்ரனிப்பிள்ளை அடிகளும், கௌரவ விருந்தினராக தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜி. வி. இராதாகிருஷ்ணனும் கலந்து கொள்வர். (க-100)

★ ★ ★

சுழிபுரம், ஒக். 3

சக்தி மது ஒழிப்புக் குழுவினர் போரூட யாழ். மேற்குத்திட்ட அனுசரணையுடன் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தினவிழா இன்று காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் போரூட் யாழ். மேற்கு திட்ட இணைப்பாளர் க. குணேந்திரதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வலி. மேற்கு வடக்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா, யாழ்ப்பாணம் போரூட் திட்ட முகாமையாளர் திருமதி ஆன் அங்கல் வீற், சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்லையா, வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் ச. இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (க-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 3

நாட்டில் சமாதானம், அமைதி வேண்டி வடபிராந்திய இந்துப் பேரவை நடத்தும் மாதாந்த விசேட பிரார்த்தனையும் 'அருள் நெறிச் செய்திக் கதிர்' அறிமுக நிகழ்வும் இன்று பிற்பகல் 2 மணிக்கு மேற்படி சபையின் தலைவர் கலாபூஷணம் ப. சந்திரசேகரம் தலைமையில் ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தில் அமைந்துள்ள அன்பகத்தில் இடம் பெறும். [க-30]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 3

இளவாலை புனித யூதா ததேயு ஆலய இளையோர்மன்றத்தின் ஏற்பாட்டில் கலை விழா இன்று மாலை 7மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 3

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் 3 ஆவது தடவையாக இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்று காலை 8. 30 மணிக்கு சங்கத் தலைவரின் இல்லத்தில் நடைபெறும்.

கண் பரிசோதனையை எரிக்கணேஷ் குழுவினர் மேற்கொள்வர்.

வலிகாமம் வடக்குப் பகுதியில் கண்பார்வை குறைந்தோர் மூக்குக் கண்ணாடிகளைப் பெற விரும்பின் கிராம உத்தியோகத்தரின் அத்தாட்சிப் பத்திரத்துடனும் மாணவர்களாயின் அதிபரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் சமுகம் தருமாறு சங்கத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் கேட்டுள்ளார், (க-30)

★ ★ ★

சுன்னாகம், ஒக். 3

வலி. வடக்குப் பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் போல் தலைமையில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் சிறுவர் நன்னடத்தை அதிகாரி சி சிவகரன் வரவேற்புரையையும் உதவித் திட்டப் பணிப்பாளர் வ. சத்தியசீலன், நிர்வாக உத்தியோகஸ்தர் க. பீதாம்பரம், அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் செல்வி செ. ல்லாதேவி ஆகியோர் விசேட உரைகளையும் வழங்குவர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும், பரிசளிப்பு வைபவமும் இடம் பெறும். (ஐ-27)

★ ★ ★

வலி. கிழக்கு, ஒக். 3

முதியோர் வாரத்தை ஒட்டி யாழ். பிரதேச செயலகம் இன்று ஞாயிற்றுக்கிழமை குருநகர் வைத்திய சாலையில் டாக்டர் எஸ். திருநாவுக்கரசு தலைமையில் இலவச மருத்துவ முகாம் ஒன்றினை நடத்தவுள்ளது.

இதேசமயம்—

யாழ். பிரதேச செயலக ஊழியர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கைதடி முதியோர் இல்லத்துக்குச் சென்று முதியோர்களைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடவுள்ளனர். (க-180)

## நாளை

புரட்டாதி 17

திங்கட்கிழமை

திதி: தசமி

முன் இரவு 8.13 வரை.

நட்சத்திரம்: பூசம்

முன் இரவு 8.11 வரை.

சுபநேரம்: 12.02—1.32

ராகுகாலம்: 7.32—9.02

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

இறைவனிடம் சரணடைவதால் ஒருவன் எதையும் இழப்பதில்லை:

சுவாமி ராமகிருஷ்ணானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரியில் அடிக்கடி மின் தடை

யாழ். போதனா வைத்தியசாலையில் தினமும் அடிக்கடி மின் விநியோகம் தடைப்படுவதால் வைத்திய சேவைகள் பாதிக்கப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

கடந்த சில நாள்களாக இந்நிலை நீடித்துவருவதாகவும், 8 மணி நேரத்தில் 15 தடவைகளுக்கு மேல் மின் விநியோகம் தடைப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

சில நேரங்களில் இத்தடை 30 நிமிடங்களுக்கு மேல் நீடிப்பதாகவும், இதனால் நோயாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது,

குறிப்பாக கண் கிளினிக். காது, தொண்டை, மூக்கு கிளினிக் எக்ஸ்றே பிரிவு என்பனவே அதிகம் பாதிக்கப்படுகின்றன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கென தனியான மின்சார இயந்திரங்கள் இயங்கிய போதிலும் அதிலிருந்து ஆஸ்பத்திரிக்கு வெளியேயும் மின் விநியோகம் வழங்கப்படுவதால் அதிக பளுவைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில், இந்த மின்சார இயந்திரங்கள் அடிக்கடி செயலிழப்பதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# பரீட்சைத் திணைக்களத்தின் பெயர் விரைவில் மாற்றம்

கொழும்பு, ஒக். 3

இலங்கை பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீடுகள் மற்றும் பரிசோதிக்கும் சேவைகள் National Evaluation and Testing Services) எனப் பெயர்மாற்றம் செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதமளவில் பத்தரமுல்லையில் கல்வி அமைச்சு அலுவலகத்துக்கு அருகில் 33 கோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்துக்கு பரீட்சைத் திணைக்களம் இடம்மாற்றம் செய்யப்படும் போது இந்தப் பெயர் மாற்றம் நடைமுறைக்கு வரும்.

பொதுப் பரீட்சைகள், வெளிநாட்டுப் பரீட்சைகள், பாடசாலைப் பரீட்சைகள், தெரிவுப் பரீட்சைகள், மதிப்பீடுகள் உட்பட பல கருமங்கள் ஒரே இடத்திலிருந்து மேற்கொள்ளப்படுவதால் பரீட்சைத் திணைக்களம் என்ற பெயரில் அழைக்கப்படுவதைவிட தேசிய மதிப்பீடுகள் மற்றும் பரிசோதிக்கும் (NET) சேவைகள் என்ற பெயரே பொருத்தமுடையதாக இருக்கும் என்று கல்வி உயர்கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [ஐ-9]

# 2,600 மெ. தொன் சீனி கப்பலில் வருகிறது

யாழ்ப்பாணம், ஒக் 3

'மாஹோ'மற்றும் 'குமண' கப்பல்களில் யாழ் செயலகத்துக்கென இரண்டாயிரத்து 600 மெ. தொன் வெள்ளைச் சீனி எடுத்துவரப்படவுள்ளது.

இந்தக் கப்பல்களில் கொண்டு வரப்படும் சீனி பொதுமக்களுக்கு கிலோ 23 தொடக்கம் 25 ரூபா விலையில் விற்பனை செய்யப்படும் என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்பொழுது கொழும்பில் பொருள்களை ஏற்றிவரும் 'மாஹோ' கப்பல் அடுத்த சில தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-5-ரி)

## தாமதத்தைத் தவிர்ப்பதற்கு

# தற்காலிக ஓய்வூதியம் வழங்குவது மீண்டும் அமுலுக்கு வருகிறது

தென்மராட்சி, ஒக். 3

சேவையிலிருந்து இளைப்பாறிச் செல்வோருக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைக் கருத்திற்கொண்டு இளைப்பாறிச் செல்லும் காலம் தொடக்கம் முதல் ஆறு மாதத்திற்குத் தற்காலிக ஓய்வூதியம் வழங்கப்பட உள்ளது,

இது தொடர்பாக ஓய்வூதியப் பணிப்பாளர் பீ.எம். பீ. ஜெயவர்த்தனா ஓய்வூதியம் வழங்கும் பிரிவுகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

இளைப்பாறிச் செல்வோருக்கு ஓய்வூதியம் வழங்குவதைத் துரிதப்படுத்தும் வகையில் கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் தற்காலிக ஓய்வூதியம் வழங்குவது நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இளைப்பாறிச்செல்லும் ஒருவருக்கு கடைசியாகப் பெற்ற வேதனத்தின் எழுபது வீதம் தற்காலிக ஓய்வூதியமாக வழங்கப்படல் வேண்டுமெனச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-117)

# புகையிலை நாற்றுமேடை அமைப்பு

வடமராட்சி, ஒக். 3

மழைபெய்துள்ளதைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியில் புகையிலை நாற்றுமேடைகளை அமைப்பதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் புகையிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பமாக இருப்பதால் அதற்கு ஆயத்தமாக நாற்றுமேடைகள் அமைக்கப்படுகின்றன. (ஐ-173)

# 3 கைதிகள் சிறையிலிருந்து தப்பினர்

கொழும்பு. ஒக். 3

பொலன்னறுவை மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் மூவர் சிறைச்சாலைச் சுவரை உடைத்துக் கொண்டு தப்பி ஓடிய சம்பவம் ஒன்று கடந்த புதனன்று இடம்பெற்றது.

கொலை, கொள்ளை மற்றும் குண்டுகள் தயாரித்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில்ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்தக் கைதிகள் மூவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கைதிகள் தப்பி ஓடிய சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என பொலன்னறுவைப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-7)

# சிறுவர்களைக் கட்டிப்போடும் ரீ.வி.!

# பெற்றோர்சிந்திக்கவேண்டியதருணம்

**. . . ஒரு சிறுவன் 18 வயதுக்குள் எத்தனை கொலைகளை தொலைக்காட்சியில் பார்க்கிறான் என்பதை எண்ணும் போது எதிர் கால சமூகம் குறித்து எப்படிக் கவலை கொள்ளாமல் இருக்க முடியும்?**

தொலைக்காட்சி உலகில் நாம் வாழ்கின்றோம். நமது சிறுவர்களின் பெரும் பகுதி நேரம் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே செலவாகின்றது. சிறுவர், இளைஞர், முதியோர் யாவருக்கும் இதில் ஆர்வம் உண்டு என்பதை மறுக்க முடியாது. பெற்றோர் பிள்ளைகளைப் பேணிவளர்க்கக் கடமைப்பட்டவர்கள். சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன். தன் மகன் சான்றோன் எனக் கேட்டதும் உவகை அடைபவள் தாய். பிள்ளைகள் நல்லவர்களாக வளரவேண்டும் என்பதைப் பெற்றோர் விரும்புவது இயல்பு.

இன்றைய தொலைக்காட்சியைத் தொடர்ந்து ஐந்து நாள்களாவது பெற்றோர் சிந்தனைக் கண்ணுடன் நோக்க வேண்டும். இது மக்களுக்கு எந்தத் துறையில் எந்த வகையில் ஆக்கத்தைக் கொடுக்கும்? நல்ல மனிதர்களை உருவாக்கத் தொலைக்காட்சி எவ்வகையில் பயன்படுகின்றது? சமயநம்பிக்கை, கடவுள் வழிபாடு, அன்பு, பண்பு, நாட்டுப்பற்று, மொழிப் பற்று, ஒற்றுமை, பிள்ளை பெற்றார் பாசம், தொழில் மகத்துவம், கடமை—உரிமை எமது கலாசாரம் ஆகிய நல்ல பண்புகளை, நல்ல வளங்களை உருவாக்க, வளர்க்க இந்தக் காட்சி வழி வகுக்குமா? என்று சிறிது பொறுமையுடன் சிந்தியுங்கள்.

நல்ல பயிரை வளர்ப்பது சிரமம். தேவையற்ற பயிர் தானே வளர்ந்து விடும். பின்பு அழிப்பது சிரமம். பேரர் ஊக்கத்தை வளர்ப்பது இலகு. அன்பை வளர்ப்பது கடினம். தொலைக்காட்சியில் பெரும்பாலும் வன்முறைகள், நம்பமுடியாத நிகழ்வுகள், எமது பாரம்பரியத்தைப் பாழாக்கும் நெறிமுறைகள், முன்பின் முரண்பட்ட நடைமுறைகள், மனைவி — கணவன் நடந்து கொள்ளும் வெறுக்கத்தக்க பேச்சுக்கள் தீய நெறியில் சிந்திக்கக்கூடிய, சிந்தனையைத் தூண்டும் செயற்பாடுகள். பாலியல் தொழிற்பாடுகள் மிக மலிந்து காணப்படுகின்றன. எதிர் காலச் சமூகத்திற்கு ஒளிமயமான வாழ்வுக்குத் தொலைக் காட்சி உதவி செய்யுமா?

பெற்றோர்களே! தயவு செய்து சிந்தியுங்கள்.

இளைஞர்கள், யுவதிகள் தீய நெறியில் விரைவாகச் செல்வதற்குக் காட்சிகள் வழி வகுக்கின்றன.

**- தனம் -**

மனிதனிடம் இயல்பாக உள்ள ஊக்கங்களை நல்வழிப் படுத்தக் கூடிய காட்சிகளே நமக்கு வேண்டும். தலைவன், தலைவி, காதலன், காதலி நல்ல இலக்கை நோக்கிச் செல்வதாகக் காட்சிகள் அமைவது நல்லது. பிரச்சினைகளை அன்பு வழியில் தீர்க்கக்கூடியதாக, சிறுவர்கள் பின்பற்றக் கூடிய நல்ல பழக்க வழக்கங்களைக் காட்சியில் காட்டலாம். பொழுது போக்கும் காட்சி மக்களைப் பாழாக்கக்கூடாது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தொலைக் காட்சி பாழாக்கி விடுகின்றது. பிள்ளைகள் எந்த நேரமும் காட்சியைப் பார்க்கிறார்கள்; படிக்கிறார்கள் இல்லை எனப் பலர்பேசுவதைக் கேட்டிருக்கின்றேன். தொலைக் காட்சியில் காட்டப்படும் வன்முறைகள் சிறுவர்களை உணர்வற்ற போர் வீரர்களாக்கிவிடும். ஒரு சிறுவன் பதினெட்டு வயதிற்குள் எத்தனை கொலைகளைக் காட்சியில் பார்க்கின்றான என்பதை எண்ணும்போது, கொலை ஒரு சாதாரண நிகழ்ச்சியாக மாறிவிடும் என்பதையும் நாம் உணரவேண்டும்.

தொலைக்காட்சியில் தோன்றும் பிம்பங்கள் அசைந்து கொண்டிருக்க அதனைப் பார்த்துக்கொண்டிருக்கும் சிறுவர்களின் கண்கள் காட்சிகளில் நிலையாகவே அமைந்திருப்பதால் தசைகள் தளர்ந்து விடுகின்றன என்பது வைத்தியர்களின் கருத்தாகும். இதனால் பின்னர் வாசிப்பதற்கு கண்மணியை நேர் நிறுத்தும் ஆற்றல் தசைகளுக்கு இல்லாமற்போய்விடுகின்றது.

மாணவர்களின் வளர்ச்சிக்குத் தொலைக்காட்சி பெரிய நன்மை செய்கின்றது எனப் பலர் வாதிடலாம். வாதிடயான் விரும்பவில்லை. யதார்த்த நிலை நின்று ஆய்வு செய்து பார்க்கவேண்டும். ஆக்கப்பாதையில் சென்றால் வரவேற்கவேண்டும், இல்லாவிட்டால் போகிறபோக்கில் விடாமல் தடுத்து நிறுத்த வேண்டும்; திருத்தி அமைக்க வேண்டும்; நாம் செய்யும் செயல்களுக்கு நல்லநோக்கம் வேண்டும். உரிய பொருள் அமையவேண்டும்; விஞ்ஞானம் ஆக்கத்திற்குப் பயன்படவேண்டும். அழிவுக்குப் பயன்படுத்தினால் விஞ்ஞானிகளே கவலைப்படுவார்கள். எனவே அறிஞர்கள் மக்கள் நலனை விரும்புவோர் ஒன்று கூடித் தொலைக் காட்சியில் உள்ள குறைபாடுகளை, உணர்வுகளை தீய வழியில் கொண்டு செல்லும் பகுதிகளை அறவே நீக்குதல் வேண்டும். நற்பயன் விளையக் கூடியதாக அமைப்பு முறை மாற்றப்படவேண்டும். ★

# தமிழ்க் கல்வி உலகுக்குத் தன்னை

# முழுமையாக அர்ப்பணித்த பேராசான்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியற்றுறை பேராசிரியரும் தலைவருமான வ. ஆறுமுகம் 30-09-1999 அன்று தனது பல்கலைக்கழக



ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

அவரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1969 இல் மாணவனாக இருந்த காலம் தொட்டு இற்றை வரையிலான முப்பது ஆண்டு காலமாக நன்கு அறிந்து கொண்டவன் என்ற வகையில் அவர் பற்றிய சில குறிப்புக்களை எழுதுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**பேராசிரியர் ச. சத்தியசீலன்**

பேராசிரியர் 15-04-1934 இல் துன்னாலையில் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை கரவெட்டி ஞானாசாரியர் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை கரவெட்டி திருஇருதயக்கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி போன்றவற்றிலும் பெற்றார். உயர்கல்வியை 1952—1956 காலப்பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் பெற்றுக்கொண்ட இவர்தமிழில் சிறப்புப்பட்டம் பெற்றவர். உயர்கல்விபெற்ற பின்னர் 1956 இல் தன் விருப்புக்குரிய தொழிலான ஆசிரியப் பணியை இரத்மலானை இந்துக் கல்லூரியில் ஆரம்பித்தார். 1962 இல் ஆசிரியர் தொழில் வாண்மையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனையில்தனதுபட்டப் பின்கல்வித்தகைமைநெறியை மேற்கொண்டார். 1968 வரையிலான பன்னிரண்டு வருடகாலமும் ஆசிரிய சேவைக்கென தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

1968 இல் இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை கல்வித்துறையில் உதவி விரிவுரையாளராகும்வாய்ப்பைப் பெற்றுக் கொண்ட இவர் 1971 இல் Academic Diploma in Education தகைமையினை லண்டன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். 1973 இல் கல்வியில் முதுதத்துவமாணி பட்டத்தினையும் லண்டன் பல்கலைக்கழகத்திலேயே பெற்றார். 1974 இல் பேராதனைப் பல்கலைக் கழகக்கல்வித்துறைகொழும்பு கல்விப் பீடத்துடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது பணியினைத் தொடர்ந்தார். 1980 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை ஆரம்பிக்கப்பட்டபோது இங்கு வந்து சேவையாற்றத் தொடங்கினார்.

அன்றிலிருந்து ஓய்வுபெறும் இன்றைய நாள் வரையிலான 31 வருடகால பல்கலைக் கழக ஆசிரியப் பணியில் விரிவுரையாளராக, துறைத் தலைவராக, பேராசிரியராக சிரேஷ்ட பேராசிரியராக வளர்ச்சி கண்ட பேராசிரியர் அவர்கள் தன்னுடையசேவை அர்ப்பணிப்பு மூலம் உருவாக்கிவிட்ட ஆசிரிய மாணவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள். 1984 இற்குப் பின்னர் அவருடைய நேரடி வழிகாட்டலின் கீழ் 30க்கு மேற்பட்ட முதுதத்துவமாணி கலாநிதிப்பட்ட மாணவர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள் என்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கல்விப் புலத்தின் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட பேராசிரியர் 1980 களில் அரசு பட்டப்பின் கல்வித் தகைமைக்கான சம்பளத்துடன் கூடிய கல்வி விடுப்பு முறையினை நீக்கியபோது எதுவித வேதனமும் இன்றி வார இறுதிநாட்களில் பகுதி நேர கற்கைநெறியை உருவாக்க முன்னின்று உழைத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகள், நூல்க[illegible] யுள்ளார். அவற்[illegible] பறைக் கற்பித்தல்', 'கல்விப் பாரம்பரியங்கள்' என்னும் இரு நூல்களும் ஆசிரிய மாணவர்களால் மிகப் பெரிதும் நாடப்படுவன. பேராசிரியர் தாய்மொழிக்கல்வி, தமிழ்த் தேசியம் என்பவற்றில்ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். தான் சார்ந்த சைவசமயத்தின்பால் பெருமதிப்புக் கொண்டவர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தாய்மையின் சிறப்புக்குச் சான்றாகும்

# கன்னி மரியாளின் தூய்மை வாழ்வு

எந்த ஒரு பிறப்புக்கும் தாயின்உறவு முக்கியமானது. தாய் நாடு, தாய்மொழி, தாய்ப் பாசம் என தாயின் தனித்துவம் சேயின் வளர்ப்பில் அதிக செல்வாக்குப் பெறுகிறது. தாய்மையின் பங்களிப்பு, தியாகம், அர்ப்பணம் என எதுவித பலனும் எதிர்பாராத புனித உறவாக மதிக்கப்பட்ட உறவை உலகுக்கு வெளிப்படுத்த இறைமகன் கிறிஸ்துவின் பிறப்புக்கும் வாழ்வுக்கும் வழிகாட்டலுக்கும் தாய்மை ஏற்றநாள் முதல் கன்னிமரியாளின் வாழ்வு தாய்மையின் சிறப்புக்குச் சான்றானது.

தாய்மை அடைந்த மரியாளின் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகள், வேதனைகள் இன்று அனுபவிக்கும் பல தாய்க்குலத்தின் முனங்கல்கள் போன்று கண் எதிரே கைதாகிக் கட்டுண்டு கசையடியுடன் சிலுவைச் சாவுக்கு தன்மகன் தீர்ப்பிட்டு சிலுவையில்தொங்கும் நிலையிலும் ஏளனப் பேச்சுகளுடன் எள்ளி நகையாடும் தாய்மையாக எதிர்கொண்டாள். இறைசித்தத்தை ஏற்றுக் கொண்டாள். அதனால் இறைவனால் தேர்ந்து

**யோசப்பாலா**

கொண்ட வாழ்வு ஈராயிரம் ஆண்டிலும் புகழப்படுகிறது. புனிதையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்வைக் கொண்டாடி மகிழ்கிறது.

கடவுளால் தேர்ந்து கொண்ட தேவதாயின் கருவில் தூய ஆவியின் அருளால் இறைமகன[illegible] கருத்தரித்தாள். [illegible]கொண்ட விசுவாசிகளுக்குக் காட்சி கொடுத்து இன்றும் சாட்சியம் தருகிறாள். சிறுவர்கள், ஏழைகள், பாமர மக்கள் மத்தியிலும் புனிதையின் காட்சிகள் உலகில் சாட்சியம் பகருகின்றன.

இறைமகனின் தாயாக ஏற்றுக்கொண்ட சிறப்பை புகழ் பாடும் மனங்களாக அகில மெங்கும் நினைவு கூரும் மரியாள் காட்சிகள் மூலம் கேட்டுக்கொள்வதும் ''மனந்திரும்புங்கள். இறை உறவுக்கு உகந்தவராக வாழுங்கள்'' என்பதையே வேண்டிநிற்கிறாள்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

திருமண வீட்டில் இரசம் தீர்ந்தது என்று திருமணவீட்டார் கலங்கிய வேளை மகனிடம் பரிந்துரை பகன்றாள். மரியாள் இன்னும் நேரம் வரவில்லையே என்றுரைத்தார் இயேசு. ஆவியானவரின் உந்தலால் உணர்ந்துகொண்ட மரியாள் திருமண வீட்டாரை ''குடங்களில் தண்ணீர் நிரப்புங்கள்'' எனப்பணிக்கிறாள். ஆறுகுடங்களில் நிரப்பப்பட்ட தண்ணீரை தாயாரின் வேண்டுதலுக்காக இறை அருள் வேண்டி அருளுரை புரிகிறார் இயேசு. ஆறுகுடம் தண்ணீர் இரசமானது. இதுவே முதல் செய்த அருங்குறி. புதுமையாக தூய ஆவியின்உந்துதலால் தாயான மரியாளின் பரிந்துரை நிறைவேற்றப்படுகிறது. தாயின் ஸ்தானத்துக்குக் தெரிந்தெடுக்கப்படும் அற்புத நினைவுகளை இன்று நினைவு கூரும் நாளில் தாய்மையின் சிறப்பை உணர்ந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளப்படவும் இறைவனால் தேர்ந்துகொண்ட மரியாளின் வாழ்வு சாட்சியம் பகர்கிறது.

அன்று வானதூதரின் குரலில், 'மரியே! அஞ்சவேண்டாம்; கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர்; அவர் பெரியவராய் இருப்பார்; உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடையஆட்சிக்கு முடிவே இராது.''

''இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே''

''கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை'' என்ற குரலுக்கு ''நான் ஆண்டவனின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' மரியாளின் தாழ்ச்சியில் கடவுளின் அருள் நிறைந்தவளானாள்.

''கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக் கல்லாயிற்று. ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது; நம் கண்களுக்கு இது வியப்பன்று!''

உலகம் தன் ஆசாபாசங்களுக்காக அதிகாரத்தனங்களுக்காக ஒதுக்கப்பட்டு, விலக்கப்பட்டு, துன்புறுத்தும் வேளை கலங்கவேண்டாம் தாட்சியின் பொருட்டு சாட்சியம் பகரும் வாழ்வே இறைவனின் மகிமைக்கு உயர்த்தப்படும். உன்வாழ்வும் இறை உறவில் இணையும்போது இறை அன்பை சுவைக்க முடியும். தேடுங்கள் கண்டடைவீர்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நகரப் பிரகடனத்தின் பின்னணி மெல்ல அம்பலமாகிறது

**திருமலைத் திருமுகம்**
**— சங்கீத் —**

திருகோணமலை நகரம் சமாதான நகரமாக பிரகடனப்படுத்தப்பட்டு ஒரு மாத காலம் முடிவடைவதற்கிடையில் இந்த நகரில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தேடுதல் வேட்டைகள் மற்றும் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பான நிலைகளும் சமாதான நகரம் பற்றிய தான ஐயப்பாடுகளை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளன.

குறிப்பாக நகரப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஊடுருவி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் கடந்த வார இறுதியில் நகரின் மையப் பகுதியில் இடம்பெற்ற சுற்றி வளைப்பு சம்பவம் தமிழர்களான நகர வாசிகளைப் பெரிதும் புண்படுத்திவிட்டது என்றே கூற வேண்டும். இந்தச் சுற்றி வளைத்துத் தேடும் நடவடிக்கையின்போது பிரதான வீதி, மத்தியவீதி, மடத்தடிப் பகுதி வரையிலான மக்கள் சோதனை என்ற பெயரில் நகரின் மையப் பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு அடையாளம் காண்பிக்கப் பட்டனர். இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவென்றால் அடையாளம் காண்பிப்பதற்கென பொது மக்கள் தனியார் பஸ் நிலையப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு சிலர் எவ்விதமான கட்டுக்காவலும் இன்றி ஏதோ அடிமைகளை அழைத்துச் செல்லும் காட்சியைக் காண்பவர்கள் போன்று பார்த்துக்கொண்டிருந்ததுதான்.

இவ்வாறு ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தினரை — வினோதப் பிராணிகளாக அடிமைகள் போன்று அழைத்துச் செல்லப்படுவதனை — ஏதோ காட்சிப் பொருளைப் பார்ப்பது போன்று பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் திருகோணமலை நகரம் ஏன் சமாதான பூமியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்ற கேள்வியையே எழுப்பி வருகின்றது.

யுத்தப் பிரதேசம் என்ற நிலையில் இந்த மாவட்டத்தின் ஒரு பகுதியே விடுதலைப் புலிகளின் கைகளில் உள்ள விடுவிக்கப்படாத பிரதேசம் என்று கூறப்படும்போது 'யுனிசெவ்' நிறுவனம் திருகோணமலை நகரினை சமாதான நகரமாகப் பிரகடனப் படுத்தியதன் உள் நோக்கங்களைப் படிப்படியாக வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக இந்த நகரில் 60 லட்சம் ரூபா செலவில் பொதுமக்களின் வரிப்பணத்தால் கட்டப்பட்டதான பொதுச் சந்தை இன்றுங்கூட இனவாதம் பூசப்பட்டுத் திறக்கப்படமுடியாத நிலையில் உள்ளது. தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான லிங்கநகர் பகுதிக்குள் வாழும் மக்கள் கூடத் தமது அடையாள அட்டையினைக் காட்டிக்கொண்டே தமது வீடுகளுக்குச் செல்ல வேண்டிய நிலை நிலவுகின்றது. ஒரு பக்கம் சட்ட விரோதமான முறையில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் பறித்தெடுக்கப்படும் வேளை மற்றொரு பக்கம் வீடமைப்புத் திட்டம் என்ற போர்வையில் கொழும்பு போன்ற இடங்களில் சிங்கள இளைஞர்களுக்கும், யுவதிகட்கும் வேலை வாய்ப்பினை வழங்கி இடமாற்றம் என்ற பெயரில் அவர்களைத் திருகோணமலைக்கு அனுப்பி வைத்து இவர்களுக்கான அனைத்து வசதிகளும் வழங்கப்படும் நிலைதான் நிலவி வருகின்றது.

இந்த நிலையில் சமாதான நகரப் பிரகடனம் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்ற பின்னணி தற்போது புலப்படத் தொடங்கி உள்ளது. முன்னாள் பரீட்சை ஆணையாளரான பிரேமதாஸ உடகம தற்போது 'யுனிசெவ்' நிறுவனத்தின் இலங்கைக்கான செயலாளர் நாயகமாகப் பணியாற்றுகின்றார். இந்த மனிதர் வழங்கிய சிபார்சின் பேரில் தான் வடக்கு — கிழக்கில் உள்ள யுத்தப் பிரதேசங்களில் ஒன்றான திருகோணமலை நகரம் சமாதான நகரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் யுத்தப் பிரதேசங்கள் எனக் கணிக்கப்படும் வடக்கு — கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏதாவது ஒரு நகரம் சமாதான நகரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தால் கூட அது அர்த்தமுடைய செயலாக இருக்கும்.

ஆனால் 'யுனிசெவ்' நிறுவனத்தின் செயலாளர் நாயகமும் அரசும் இணைந்து மேற்கொண்டிருக்கும் இந்த கபட நாடகம் தற்போது புரிய ஆரம்பித்துள்ளது. தங்க முலாம் பூசப்பட்டதான மிகப் பெரிய திறப்பு ஒன்றினையும் இவர்கள் நகராட்சி மன்றத்திடம் கையளித்துள்ளனர்.

இவ்வாறு வழங்கப்பட்ட திறப்பின் மூலம் திருகோணமலையை சமாதான நகரமாக்கி இதனை சகல இன மக்களுக்கும் பொதுவான நகரம் என்ற அடிப்படையில் தமது காரியங்களை மேற்கொள்ளத் திட்டமிட்ட ஒரு நடவடிக்கையே சமாதானப் பிரகடனம் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

1947 ஆம் ஆண்டில் திருகோணமலை நகரில் 47 சிங்களக் குடிகள் வாழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. இன்றோ இந்த மாவட்டத்தின் வாக்காளர்களாக முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள வாக்காளர்கள் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

சமாதானப் பிரகடனமூ இத்தகைய குடியேற்றங்கள், ஆலயங்கள் என்பனவற்றை அமைக்க வழி கோலுவதுடன் சமாதான நகரத்தின் பெயரால் தாம் நினைத்த எதனையும் சாதித்துவிட முடியும் என்ற நம்பிக்கையிலேயே அரசும் சமாதானப் பிரகடனத்தினை மேற்கொண்டோரும் செயற்பட்டு வருவதனை அண்மைக்கால சம்பவங்கள் படிப்படியாக உணர்த்தத் தொடங்கியுள்ளன.

ஒரு கால கட்டத்தில் திருகோணமலை நகரம் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற வகையில் இங்கு வாழும் தமிழ் மக்கள் பெருமையுடன் செயற்பட்டு வந்துள்ளனர்.

அந்த வரலாற்றுப் புகழும் நமது பாரம்பரிய பிரதேசம் என்ற பெருமையும் சமாதான நகரம் என்ற பெயரால் தமிழ் மக்களின் பிடியிலிருந்து மெள்ள மெள்ள விலகிச் சென்று கொண்டிருக்கின்றது என்றே கூற வேண்டும். ★

# சிங்கள அரசியல்மேடையில் மாறி நடிக்கும் பாத்திரங்கள்

**கொழும்பிலிருந்து**
**ராகவன்**

இலங்கை அரசுடன் பேச தயாராகவுள்ளதாக புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆயர்களிடம் தெரிவித்த கருத்து தென்னிலங்கை மக்களிடையே குறிப்பாக தமிழ் மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த வாரம் புலிகளை சந்தித்த ஆயர்களிடம் தெரிவிக்கப்பட்ட தமிழ்ச்செல்வனின் கருத்து தமிழ் பத்திரிகைகள் தவிர்ந்த ஏனைய பத்திரிகைகளில் பெரிதாக எழுதப்படவில்லை. யுத்த பிடியில் தமிழர்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் சிக்கித் தவிக்கும் இவ்வாறானதொரு தருணத்தில் புலிகளின் வேண்டுகோளை கெட்டியாக பிடித்துக் கொள்ளும் பொறுப்பு அரசுக்கு உண்டு. சில சிங்கள செய்தித் தாள்கள் இக்கருத்தை போலியாக்கி எழுதியிருந்ததுடன் சமாதான தூது சென்ற தரப்பையும் கண்டித்திருந்தது கவலைக்குரியது.

இவ்வாறான ஒரு கருத்தை புலிகள் வெளியிட்டுள்ள தருணத்தில் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு வெளிநாடுகள் தலையிடக்கூடாது. ஐ.நா. உட்பட இதர அமைப்புகள் நுளம்புக்குத் தூவும் மருந்தாகவே செயற்பட வேண்டுமென்றும் பேசியுள்ளார். இதன் மூலம் மூன்றாந் தரப்பை நிராகரித்துள்ள கதிர்காமர் சிங்கள செய்தித் தாள்களில் செயல் வீரராக வர்ணிக்கப்பட்டுள்ளார். ஆனால் மூன்றாந்தரப்பின்றி இவ்வாறான சிக்கல்மிகு பிரச்சினையொன்றை தீர்க்க முடியுமா? என்பது தமிழர்களின் கேள்வியாக மட்டுமன்றி சிங்கள மக்களில் கணிசமானோரினதும் கருத்து என்பதனை மறந்துவிட முடியாது. 80 களில்இப்பிரச்சினை போதிய பிரசாரத்தைப் பெற்றிராவிட்டாலும் தற்போது அதன் வடிவமே மாறி உலக சமூகமே இலங்கைப் பிரச்சினை பற்றி உன்னிப்பாகவுள்ளது. அதேநேரம் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல என்பதையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிரூபித்துள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் ஒன்றை ஒன்று நம்பகத் தன்மையை இழந்த நிலையிலேயேயுள்ளன. ஆசிய மனித உரிமை அமைப்புகளும் கடந்த காலங்களில் மூன்றாந் தரப்பு பற்றி பேசியுள்ளதையும் மறக்க முடியாது. இந்தியாவின் உண்மையான நிலைப்பாடு என்ன?

இனப்பிரச்சினையை எவரும் உள்நாட்டு பிரச்சினையாக விட்டுவிட இந்தியா இணங்குமா? என்பதெல்லாம் பலர் மத்தியில் எழும் கேள்விகளாக உள்ளன. அதேபோல் முன்னர் இவ்விரு தரப்பும் பல தடவை மூன்றாந்தரப்பின் பங்களிப்பின்றி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதுடன் அவை அனைத்தும் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுத்தருவதைவிட மேலும் பிரச்சினையை வலுப்பெறச் செய்தன. அரசு மீது புலிகளுக்கு நம்பிக்கை இல்லை; புலிகள் மீது அரசுக்கு நம்பிக்கை இல்லை.

இச் சூழ்நிலையை மாற்றி அமைக்க மூன்றாந்தரப்பின் பங்களிப்பு இன்றியமையாததே. கதிர்காமர் போன்ற சிங்கள அரசின் ஒலிபரப்பாளருக்கு இதன் உண்மைத் தன்மை தெரிந்திருக்காது. குறிப்பாக நீலம் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டபோதுகண்டனக் கணைகளைத் தொடுத்த கதிர்காமர் அதே இனத்தைச் சேர்ந்த 22 பேர் புதுக்குடியிருப்பில் படுகொலை செய்யப்பட்ட போது மௌனித்துப் போனார். பெயரில் மட்டும் தமிழை வைத்துக் தொண்டு செயலில் பக்கசார்புடன் நடந்துகொள்வதென்பது அவர் கண்டறிந்த அரசியல் உத்தியாக இருக்கலாம்.

இது இவ்வாறிருக்க, ஆளுங் கட்சிக் கூட்டணிக்கிடையே பிளவு ஏற்படுமோ என்ற நிலைப்பாட்டை காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக அஷ்ரப் எதிர் றிச்சர்ட்பத்திரன கருத்து வேறுபாடு இரு கட்சிகளிடையே முறுகல் நிலையைத் தோற்றுவித்துள்ளது. அவசர நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தை கூட்டும்படி அஷ்ரப் கோரிக்கை விடுத்ததை அடுத்து, ஆளுங் கட்சி அமைச்சர்கள் சமரச முயற்சியில் இறங்கத்தொடங்கினர். அமைச்சர் அஷ்ரப் சிங்கள பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்களுக்கு இருபது வீத இடம் ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்திருந்ததை அடுத்தே ரிச்சர்ட் அஷ்ரப் கருத்துமோதல் ஏற்படத் தொடங்கியது. ஏற்கனவே சமவாய்ப்புச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த பத்திரனவுக்கு அஷ்ரப்பின் வேண்டுகோளும் எரிச்சலைத் தந்திருக்கலாம். இதையடுத்து தோன்றிய முறுகல் நிலை இன்று இலியாஸ் எம்பியின் நிதி ஒதுக்கீடு வரை நீடித்துள்ளது.

அத்துடன், இந்த [illegible]

(11 ஆம் பக்கம் பார்க்க)

# எதிரொலி...

**- இடியன் -**

● மும்பாயில் பசுமாட்டின் வயிற்றிலிருந்து சத்திர சிகிச்சை மூலம் 4.000 பொலித்தீன் பைகள் எடுக்கப்பட்டனவாம்!

★ அந்த மாடு இதுவரை ''போலி'' த்தீனையே சாப்பிட்டிருக்கின்றது!

● பாடசாலைகளில் பாலர்களுக்கு இனி, பால் வழங்கப்படுமாம்!

★ சொன்னபடி நடந்தால் பால் குடிக்கும் விருப்பால், பெரும்பாலான பாலர்களைப் பாடசாலைகளின் பால் காணலாம்!

● தொடர்ந்து பத்து நாள்களுக்குப் பேச வேண்டாம் என அமெரிக்க அதிபர் கிளின்ரனுக்கு அவருடைய வைத்திய நிபுணர்கள் ஆலோசனை கூறியுள்ளனராம்!

★ இப்படியான ஓர் ஆலோசனையை இங்குள்ள அரசியல்வாதிகளுக்கு வழங்கும் நாள் எந்நாளோ? என ஏங்குவார் பலர்!

● கொழும்பு – யாழ். இடையே பயணம் செய்வதற்குப் பாதுகாப்பு அனுமதி தேவையெனச் சட்டம் கூறவில்லை.

★ அனுமதி தேவைதான் எனச் சில ''சட்டைகள்'' கூறுவதை அசட்டை செய்யும் துணிவு சாதாரண மக்களுக்கு இல்லையே!

● யாழ்ப்பாணத்தில் இதுவரை 400 கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு விட்டனவாம்!

★ அகற்றப்பட்டிருக்காவிட்டால், எத்தனை பேரின் கண்ணீர் வெடித்திருக்கும்!

● பாவனையாளரின் நன்மை கருதி, கொழும்பு விலைக்கே, யாழ்ப்பாணத்திலும் 'சிகெரட்' விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்!

★ நன்மை கருதியா? தீமை கருதியா?

● இலங்கை இனப்பிரச்சினையில் ஐ. நா. தலையிடத் தேவையில்லை எனக் கூறுகிறார் வெளிவிவகார அமைச்சர்!

★ ''பயங்கரவாதிகளுக்காக உங்கள் நாடுகளில் பணம் சேர்ப்பதை முற்றாகத் தடைசெய்யுங்கள்'' என ஐரோப்பிய நாடுகள் பலவற்றைப் பகிரங்கமாகக் கேட்பதன் மூலம், அந்த நாடுகளின் 'உள்' விஷயங்களிலே தான் தலையிடுவதை அவர் உணர்வதாகத் தெரியவில்லையே!

● கொலைகளைக் கண்டித்ததற்காக ஐ. நா. மீது கதிர்காமர் பாய்ச்சல்!

★ நிச்சயமாக அது வேகப் பாய்ச்சலாக இருந்திருக்காது!

● காவரி நீர் சம்பந்தமான உடன்படிக்கையின் படி நடக்க, கர்நாடகம் தவறிவிட்டது!

★ கர்நாடகத்தைப் பொறுத்தவரை அந்த ஒப்பந்தம் ''நீர் மேல் எழுத்தா''கிவிட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் தேவை

6, 7, 8 ஆம் ஆண்டுகளுக்கு கல்வி கற்பிப்பதற்கு
யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட
ஆசிரியர் ( பெண் ) தேவை.
6 – 10 – 99 புதன்கிழமைக்கு முன்
காலை 9.00—12 00 மணிக்கு நேரில் வரவும்.

**விக்னா கல்வி நிறுவனம்**
இல. 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(69584)



## கிற்றோ

♠♠♠♠♠♠

இறக்குமதி செய்யப்பட்ட (ஒறிஜினல் கிற்றோ)
பாதணிகள்
கண்கவர் வர்ணங்களில்
கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள்
காரியாலய உத்தியோகத்தர்கள்
ஏனைய சகல தரப்பினர்களுக்கும் உகந்தவை

**KITTO SANDLES**

கிடைக்கும் இடம்:
**ரட்ணம்ஸ் பாட்டா**
49, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**நாகம்ஸ் பாட்டா**
10, நவீன சந்தை,
சுன்னாகம். (69564)



உ
சிவமயம்
ஏழாலை வசந்தபுரம்
அருள்மிகு

## வசந்தநாகபூசணி அம்மன் தேவஸ்தானம் ஏகதின இலட்சார்ச்சனை பெருவிழா விஞ்ஞாபனம்

**04 10 1999 திங்கட்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை | 7.00 மணிக்கு | அபிஷேகம் |
| காலை | 9 00 மணிக்கு | பூசை |
| காலை | 10.00 மணிக்கு | இலட்சார்ச்சனை ஆரம்பம் |
| பி, ப, | 3 00 மணிக்கு | இலட்சார்ச்சனை பூர்த்தி |
| பி. ப. | 3,15 மணிக்கு | சுவாமி வீதி உலா |

**05-10-1999 செவ்வாய்க்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை | 10.00 மணிக்கு | 1008 சங்காபிஷேகம் |
| | | பூசை |
| | | சுவாமி வீதி உலா |
| பிற்பகல் | 1.00 மணிக்கு | அன்னதானம் |

பிரதம குரு; தியாக கெங்காதரக் குருக்கள் (புன்னாலைக்கட்டுவன்)
சர்வபோதகர்! சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் (காயத்திரி பீடம், இணுவில்) தலைமையில் 18 சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.
சொற்பொழிவு; சிவத்திரு. வ. குமாரசுவாமி ஐயா

- ஸ்ரீ வசந்தநாகபூசணி அம்மன் தேவஸ்தானம்
ஏழாலை. (69558)


## தமிழ்க்கல்வி. . .

[ஆறாம் பக்கத் தொடர்]

பேராசிரியர் அவர்கள் கல்வித்துறைக்கு ஆற்றிய நீண்டகால சேவைக்காக இலங்கை அரசாங்கத்தினால் 'கன்னங்கரா விருது' வழங்கி கௌரவிக்கப்பட்ட பெருமையுடையவர். பல்கலைக்கழக ஆசிரிய சேவையில் தனக்கெனத் தனியிடத்தைப் பெற்ற பேராசிரியர், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவராக, செனற் உறுப்பினராக செனற் பட்டமளிப்பு விழாக்குழு பரிசில்கள், விருதுகள் குழு, ஆய்வு, உயர்பட்டங்களுக்கான குழு உறுப்பினராக, பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக நீண்டகாலமிருந்து பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு உழைத்தவர். பல்கலைக்கழகத்திற்குள் மட்டும் தன் சேவையை அடக்கிவிடாது அதற்கும் அப்பால் தான் சார்ந்த சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர். இவ்வகையில் யாழ்ப்பாணம் 'தீபம்' நிறுவன ஆய்வுகளினூடாக தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பிற்கு வலிமை கொடுத்தவர். உரும்பிராய் ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவராக, உரும்பிராய் லயன்ஸ் கழக உபதலைவராக சமூகப் பணிகளை மேற்கொண்டு வருபவர்.

நேர்மை, மனிதநேயம், சான்றாண்மை, பணிவு, கொள்கைப்பிடிப்பு, நேரந்தவறாமை, கண்டிப்பு என்பன அவரிடமிருந்து இளம் தலைமுறையினர் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆசிரிய மாணவர்களால் நன்கு விரும்பப்பட்ட மதிக்கப்பட்ட ஒருவராவார். இவருடைய மாணவர்கள் பலர் இன்று இலங்கைப் பல்கலைக்கழக கல்வித் துறைகளில் பேராசிரியர்களாக, விரிவுரையாளர்களாகப் பதவி வகித்து வருவதும், கல்வித் துறை நிர்வாகிகளாக இலங்கையில் பல பாகங்களிலும் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கவை.

அவருடைய பலதரப்பட்ட அனுபவங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகச் சமூகத்திற்குப் பெரிதும் பயன்பட்டுள்ளன. அவருடைய ஓய்வு பல்கலைக்கழக சமூகத்தை கல்விப்புலத்தைப் பொறுத்தவரையில் பெரிதும் இழப்பாகவே அமையும். அவரது ஓய்வு காலம் அமைதியும் மகிழ்ச்சியும் கொண்டதாக அமைய இறைவனை வேண்டுகின்றேன். ★

## பதவி உயர்வு

வடபிராந்திய போக்குவரத்துச் சபை, பருத்தித்துறைச் சாலையில் நடத்துனர்களாகப் பணிபுரிந்த 8 பேர் திடீர் டிக்கற் பரிசோதகர்களாகப் பதவியுயர்த்தப் பட்டுள்ளனர். (ஐ- 15)

## மக்கள் முகம்



மாகியம்பதி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஐ. மார்க்கண்டன் மல்லாகம் மாவட்ட நீதிவான் இ. த. விக்கினராசா முன்னிலையில் கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்

அளவெட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராகப் பணி புரிந்து ஓய்வு பெற்ற இவர் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி றோ. க. த. பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

சமய சமூக, இசைத்துறை ஆகியவற்றிலே ஈடுபட்டு வரும் இவர் மாகியம்பதி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராகவும், அளவெட்டி தென்னிந்தியத் திருச்சபையின் செயலாளராகவும் அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் உறுப்பினராகவும் சேவையாற்றி வருகின்றார்.

(ஐ-13)

★ ★ ★ ★ ★



பூமகள் வீதி, அரியாலை மேற்கைச் சேர்ந்த தாதப்பிள்ளை செல்வரத்தினம் கடந்த மாதம் முதலாம் திகதி முதல் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியின் பழைய மாணவராவார். அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தின் வெள்ளிவிழாக் காலத்தில் (1975) விளையாட்டுக் குழுத் தலைவராகவும் அதற்கு அடுத்த ஆண்டுகளில் கலைவிழாத் தலைவராகவும் இருந்து சேவையாற்றிய இவர் அதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் நிலையப் போசகராகவும் இருந்தார்.

அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்துவரும் இவர் சுகாதாரத் திணைக்களத்தின் யாழ். மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்தின் பிரதம எழுதுநராகவும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றி வருகிறார். (ஐ-4)

★ ★ ★ ★ ★



ஏழாலை மேற்கு, ஏழாலையைச் சேர்ந்த சரவணை தில்லைநாதன் மல்லாகம் மாவட்ட நீதிவான் இ. த. விக்கினராசா முன்னிலையில் கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரியப் பணி புரிந்து ஓய்வு பெற்ற இவர் ஏழாலை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவராவார். அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபையின் செயலராகவும், ஏழாலை மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகவும், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 25 ஆம் கிளையின் உப தலைவராகவும் ஏழாலை சைவ வாலிபர் சங்கச் செயலாளராகவும் இருந்து சமய, சமூகப்பணி புரிந்து வருகிறார்.

(ஐ-13)

★ ★ ★ ★ ★



கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றும் கைதடி மேற்கைச் சேர்ந்த ப. செல்லத்துரை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

தென்மராட்சி பிரதேச ச, ச. நிலையங்களின் சமாசத்தின் தலைவராகவும், யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் உப தலைவராகவும், கைதடிமேற்கு சரஸ்வதி ச. ச. நிலையம், கிராம அபிவிருத்திச்சங்கம், நேவவத்தை குடியேற்றத்திட்ட அபிவிருத்திக் கழகம் போன்றவற்றின் காப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

தென்மராட்சி ப. நோ கூ சங்கத்தின் முன்னாள் தலைவரான இவர் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினராகவும் இருந்து சேவைகளை ஆற்றிவருகின்றார்.

(ஐ-5)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை சபாரத்தினம்**
(சபா அண்ணை)



திருமதி
**சபாரத்தினம் இராசமணி**
(றோஸ்)

இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

புது வீதி, கொய்யாத் தோட்டம்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
[69577]



## வாழ்த்துகின்றோம்

எமது வித்தியாலயத்தின் பழைய மாணவரும்
முன்னாள் ஆசிரியரும், அதிபரும் ஆகிய
யாழ்ற்றன் கல்லூரியின் அதிபர்

**திரு. என். பரமசிவம்**

அவர்கள் பதவி உயர்வு பெற்று ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

வா/ வியாவில் சைவ வித்தியாலயம்,
காரைநகர். (69688)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி [ஈ.பி.டி.பி]
## 1998 ஆம் ஆண்டு கையேற்ற பின்பு நடைபெற்ற
# செயல் திட்டங்களின் விவரம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது மக்களால் தெரிவு செய்யப்பட்டு, உள்ளூராட்சி சபைகளைப் பொறுப்பேற்று, அதனூடாக மக்களின் தேவைகளை இனங்கண்டு அதன் அடிப்படையில் சேவைகளைச் செய்து வருகின்றோம். எமது கட்சியின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நேரடி வழிகாட்டல்கள் மூலமும், யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர். திரு. வி. கே ஜெகன் அவர்களது இடைவிடா முயற்சியாலும் எமது சபையின் உப தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உள்ளூராட்சி ஆணையாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடும் எமது பிரதேச மக்களின் இதயபூர்வமான ஆதரவோடும் நாம் இதுவரை எமது சபை மூலம் மேற்கொண்ட அபிவிருத்தி, புனரமைப்புச் செயல்திட்டங்களை இப்பத்திரிகை வாயிலாக சமர்ப்பிக்கின்றோம்.

திரு. க. சிவநேசன்
செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,

என்றும் மக்கள் சேவைக்குரிய
திரு. வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்,
(சமாதான நீதிவான், உத்தியோகப் பற்றற்ற நீதிபதி),
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு, பிரதேச சபை, மானிப்பாய்.

## விசேட நிதி ரூபா 30 லட்சம் - 1998

அ) விசேட நிதி 1998 இல் முடிக்கப்பட்ட வேலைகள் விவரம்:

| | | |
|---|---|---|
| 01) | தென்னை நடுகை(பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது) | 100,000/- |
| 02) | மரமுந்திரிகை நடுகை (பிரதேச சபை எல்லைக் குட்பட்ட மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது) | 100,000/- |
| 03) | யூதாததேயு சனசமூக நிலைய புதிய கட்டடம் அமைத்தல், இளவாலை. | 100,000/- |
| 04) | காக்கைதீவு சந்தை அணைக்கட்டு அமைத்தல், ஆனைக்கோட்டை | 200,000/- |
| 05) | பாரதி சனசமூக நிலைய கட்டடம் புதிதாக அமைத்தல், மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய் | 100,000/- |
| 06) | நவாலி வடக்கு சனசமூகநிலைய புதிய கட்டடம் அமைத்தல். | 50,000/- |
| 07) | நல்லாயன் சனசமூக நிலைய கட்டடம் திருத்தம் சில்லாலை வடக்கு | 50,000/- |
| 08) | அம்பாள் சனசமூக நிலைய கட்டடம் திருத்தம், ஆனைக்கோட்டை | 50,000/- |
| 09) | திருவள்ளுவர் சனசமூக நிலைய கட்டடம் திருத்தம் மானிப்பாய் | 50,000/- |
| 10) | முரசொலி சனசமூகநிலைய கட்டடம் திருத்தம், நவாலி தெற்கு | 50,000/- |
| 11) | சுதுமலை தெற்கு யுவசக்தி சனசமூக நிலைய கட்டடம் திருத்தம் | 50,000/- |
| 12) | செபமாலை மாதா சனசமூக நிலைய கட்டடம் திருத்தம் பண்டத்தரிப்பு | 50,000/- |
| 13) | ஐக்கிய சனசமூக நிலைய கட்டடம் திருத்தம், உயரப்புலம், ஆனைக்கோட்டை | 50,000/- |
| 14) | சூரியோதய சனசமூக நிலைய கட்டடம் திருத்தம், மாசியப்பிட்டி | 50,000/- |
| 15) | சித்திரமேழி ஆனந்தன் சனசமூக நிலைய புதிய கட்டடம் அமைத்தல், இளவாலை | 50,000/- |
| 16) | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இலவசமாக நூல்கள் வழங்கப்பட்டுள்ளது | 100,000/- |
| 17) | மயில்வாகனப் புலவர் சனசமூக நிலையக் கட்டடம் திருத்தம், மாதகல் வடக்கு | 50,000/- |
| 18) | புனித அந்தோனியார் பாடசாலைக் கட்டடம் திருத்தம், பெரியவிளான் | 100,000/- |
| 19) | பாரதி சனசமூக நிலைய பிரேதவண்டில் திருத்தம், உயரப்புலம், மானிப்பாய் | 50,000/- |

ஆ) 1998 இல் விசேட நிதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை விவரம்:

| | | |
|---|---|---|
| 01) | கிராமிய சந்தைக் கட்டட புனரமைப்பும் புதிய கட்டடம் அமைத்தல், மாசியப்பிட்டி | 600,000/- |
| 02) | அலுவலக இயந்திரங்கள் உபகரணங்கள் தளபாடங்கள் 5 உருக்கு அலுமாரி 2 உருக்கோவை அலுமாரி தமிழ் தட்டெழுத்து இயந்திரம் 4, 1போட்டோ கொப்பி மெசின், 10 மேசைகள், 30 பேப்பர் ரே, 20 கதிரைகள் கொள்வனவு, தலைமை அலுவலகம் | 500,000/- |
| 03) | வரகுசாட்டி கிறவல் வீதி திருத்தம், நவாலி | 60,000/- |
| 04) | நவாலி பிரசாத் சந்தைக்கட்டடம் திருத்தம் | 60,000/- |
| 05) | கட்டுடை சனசமூக நிலையக் கட்டடம் திருத்தம் | 40,000/- |
| 06) | நவாலி சக்கராலயா தார் வீதி திருத்தம் | 60,000/- |
| 07) | மாதகல் வடக்கு நாவலர் சனசமூக நிலைய கட்டடம் அமைத்தல் | 100,000/- |
| 08) | மானிப்பாய் வளர்மதி சனசமூக நிலையக் கட்டடம் அமைத்தல் | 100,000/- |
| 09) | மாதகல் காந்திஜி சனசமூக நிலையப் பாலர்பாடசாலை தளபாடம் செய்தல் | 40,000/- |
| 10) | மகாஜன சனசமூக நிலையம், தளபாடம் செய்தல் | 40,000/- |

இ) 1998 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலை விவரம்:

| | | |
|---|---|---|
| 01) | பண்டத்தரிப்பு விநாயகர் கிராம அபிவிருத்திச் சனசமூக நிலைய பாலர் பாடசாலைக் கட்டடம்திருத்தம் | 65,000/- |
| 02) | சண்டிலிப்பாய் ஆலங்குழாய் சனசமூக நிலைய கட்டடத் திருத்தம் | 50,000/- |

ஈ) 1999 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் செய்யப்படவிருக்கும் வேலை விவரம்:

| | | |
|---|---|---|
| 01) | ஆனைக்கோட்டை ஆதவன் முன்பள்ளி பாடசாலை திருத்தம் | 25,000/- |
| 02) | கிறிஸ்துராஜா சனசமூகநிலைய புனரமைப்பும், தளபாடம், பண்டத்தரிப்பு | 25,000/- |
| 03) | கலைவாணி சனசமூகநிலையம், புனரமைப்பு, பண்டத்தரிப்பு, வடலியடைப்பு | 50,000/- |
| 04) | சாவற்கட்டு அத்துக்குளி ஞானவைரவர் ஆலய ஒலிபெருக்கி கொள்வனவு | 35,000/- |
| 05) | ஐங்கரன் சனசமூக நிலையம் புனரமைப்பு, சுதுமலை | 35,000/- |
| 06) | ஸ்ரீ முருகன் சனசமூகநிலையம், உயரப்புலம், இளவாலை முன்பள்ளி பாடசாலை தளபாடங்கள், உபகரணங்கள் செய்து வழங்கப்பட்டது. | 25,000/- |
| 07) | மாதகல் நாவலர் சனசமூக நிலையம், புனரமைப்பு | 35,000/- |
| 08) | பாரதி சனசமூகநிலையம், புதிய கட்டடம் அமைத்தல் மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய் | 50,000/- |

உ) 1998 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலை விவரம்.

| | | |
|---|---|---|
| 01) | நவாலி சுடலை மதகு திருத்தம் | 50, 000/- |
| 02) | முள்ளானை தார் வீதி திருத்தம், இளவாலை | 110,000/- |
| 03) | மூத்ததம்பி தார் வீதி திருத்தம், மானிப்பாய் | 50,000/- |
| 04) | பிரான்பற்று முன்பள்ளி பாடசாலை, தளபாடம் செய்து வழங்கப்பட்டது | 40,000/- |
| 05) | பண்டத்தரிப்பு சென்மேரி முன்பள்ளி பாடசாலை தளபாடம் செய்து வழங்கப்பட்டது | 40,000/ |
| 06) | மாதகல் சுடலைமடம் திருத்தம் | 70,000/-- |
| 07) | காக்கைதீவு குடியேற்றத்திட்ட கிறவல் வீதி திருத்தம் | 65,000/- |

ஊ) 1999 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியிலிருந்து செய்யப்படவிருக்கும் வேலை விவரம்;

| | | |
|---|---|---|
| 01) | காக்கைதீவு சுடலைமடம், கட்டடம் திருத்தம் | 80,000/- |
| 02) | காக்கைதீவு சுடலை கிறவல் வீதி திருத்தம் | 50,000/- |
| 03 | சங்கரப்பிள்ளை வீதி, கிணறு திருத்தம், மானிப்பாய் | 15, 000/- |
| 04) | வடலியடைப்பு வீதி வடிகால் அமைத்தல், பண்டத்தரிப்பு | 70,000/- |

எ) 1998 ஆம் ஆண்டு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை, வடக்கு (றான்) நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலை விவரம்;

| | | |
|---|---|---|
| 01) | பற்றிமாகிரி கிறவல் வீதி, பண்டத்தரிப்பு | 75. 000/- |
| 02) | கேணியடி கிறவல் வீதி, பண்டத்தரிப்பு | 75,000/- |
| 03) | உயரப்புலம் மாரீசன்கூடல் கிறவல் வீதி, திருத்தம் | 150,000/- |
| 04) | அரசடிப்பிள்ளையார் வீதி மதகு திருத்தம் மானிப்பாய் | 250,000/ |
| 05) | மானிப்பாய் கிராம உப அலுவலக, ஆயுர்வேத கட்டடம் திருத்தம் | 200,000/- |
| 06) | மானிப்பாய் பட்டின உபஅலுவலக சந்தைக் கிணறு திருத்தம் | 50,000/- |
| 07) | சாந்தை குடியேற்ற பொதுக்கிணறு திருத்தம், பண்டத்தரிப்பு பட்டினம் | 20,000/- |
| 08) | உயரப்புலம் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக பொதுக்கிணறு திருத்தம் | 5,000/- |
| 09) | மாதகல் வெள்ளவாய்க்கால் பொதுக்கிணறு திருத்தம் | 10.000/- |
| 10) | பற்றிமா பொதுக்கிணறு திருத்தம், பண்டத்தரிப்பு | 15,000/- |
| 11) | மாசியப்பிட்டி சந்தைக் கிணறு திருத்தம் | 25,000/- |
| 12) | மானிப்பாய் பட்டின உபஅலுவலக கிணறு திருத்தம் | 50,000/- |
| 13) | மானிப்பாய் கிராம உபஅலுவலக கிணறு திருத்தம் ஆனைக்கோட்டை | 10,000/- |
| 14) | நவாலி வடக்கு பொது கற்கேணி திருத்தம் | 15,000/- |

1999 ஆம் ஆண்டு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை வடக்கு (றான்) நிதியிலிருந்து நடைபெற்ற வேலை விவரம்

| | |
|---|---|
| உயரப்புலம் மாரீசன்கூடல் தார் வீதி, திருத்தம் இளவாலை | 450,000/- |

ஏ) 'யுனிசெவ்' நிதியால் 1998 இல் நடைபெற்ற வேலை விவரம்

| | | |
|---|---|---|
| 01) | காக்கைதீவு சந்தை புனரமைத்தல் | 495,000/- |
| 02) | கட்டுடை நீர் விநியோகத்திட்டம், (அப்பகுதி மக்களின் வேண்டுகோளின்படி செய்யப்பட்டது) | 412,750/- |

ஐ) யூ, என். டீ. பி. நிதியில் 1998 இல் நடைபெற்ற வேலை விபரம்:

| | | |
|---|---|---|
| 01) | பண்டத்தரிப்பு சந்தை திருத்தம் | 3,902,500/- |

ஒ) சபை நிதியிலிருந்து 1998 ஆம் ஆண்டு செய்த வேலைகள் விவரம்:

| | | |
|---|---|---|
| 01) | மானிப்பாய் சந்தை வளவு ஊரி மண்ணால் நிரப்பி மட்டப்படுத்தல் | 2.100/- |
| 02) | வைரவர் கோயில் கிறவல் வீதி திருத்தம், சுதுமலை | 8,350/50 |

சபை நிதியிலிருந்து 1999 ஆம் ஆண்டு செய்த வேலைகள் விவரம்:

| | | |
|---|---|---|
| 01) | யூ. என். டீ. பி நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஊஞ்சல் ராட்டினம் அமைத்தல், தலைமை அலுவலகம் | 1,350/- |
| 02) | பூங்காவிற்கு முன்னுள்ள குழாய்க்கிணறு திருத்தம், மானிப்பாய் | 562/50 |
| 03) | பொதுநூலக தளபாடங்கள், கதவு, யன்னல் திருத்தம், மானிப்பாய் | 3,330/- |
| 04) | கட்டுடை குழாய்நீர் விநியோக நீர்த்தாங்கி குழாய்த் திருத்தம் | 2,475/- |

சபை நிதியிலிருந்து 1999 ஆம் ஆண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் விவரம்:

| | | |
|---|---|---|
| 01) | கெங்காதேவி ஆலய கிணறு திருத்தம் சாவற்கட்டு | — 39. 000/- |
| 02) | பிரதேச சபை தலைமை அலுவலகக் கட்டடம் திருத்தம், மானிப்பாய் | |
| 03) | மானிப்பாய் சந்தைக் கட்டடம் திருத்தம் | 260, 000/- |
| 04) | காக்கைதீவு கொல்களம் புதிதாக அமைத்தல் | 100, 000/- |
| 05) | ஐயனார் வீதியிலிருந்து சிலம்பந்தறைக்குச் செல்லும் கிறவல் வீதி ஒழுங்கை திருத்தம், சண்டிலிப்பாய் | 28, 000/ - |
| 06) | இளவாலை சந்தை புதிய கட்டடம் அமைத்தல் | 15, 500/ - |
| 07) | நவாலி தார் கல் வீதி திருத்தம் | 80, 000 /- |
| 08) | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைகளில் வரவேற்பு பலகை அமைத்தல் | 7, 250/- |

(சி/9146)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறொஜெக்டர் (Projector) Sanyo – 220 p (300'') விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவகுமார் (சிறி) பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம். T.P No. 021-2917. (69522)

வீட்டுத் தளபாடங்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- 95- A கோயில் வீதி, நல்லூர். (69517)

3,4,5,6,8 அடி புதிய உடைந்த அஸ்பெற்றஸ்ட் சீற் தேவையான தொகையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கிருஷ்ணகுமார், விதானைவளவு, மானிப்பாய். (69515)

முட்டை இடும் 40 கோழிகள் விற் னைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: கா. லோகேந்திரன் இல. 41, விபுலானந்த வீதி, கொழும்புத்துறை மேற்கு, கொழும்புத்துறை. (69536)

40 நாள் நிரம்பிய நல்லின ஜேர்மன்சப்பேட் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: 42, பலாலி றோட், கந்தர்மடம். (69567)

குளிர் சாதனப் பெட்டிகள் (டபிள்டோர் யப்பான், சிசில் 80,) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 103, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [69537]

R80 Sisil(115CmH, 59.5 Cm W) நல்ல நிலையிலுள்ள குளிர் சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு தொடர்பு:- ஆ. நடராசா, ''ஏரகம்'', மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (சி/9144)

நீர் இறைக்கும் Water Pump (B S A Model) விற்பனைக்கு உண்டு. உடன் உபயோகிக்கக் கூடியது தொடர்பு: A.T. செல்வரத்தினம், '' தவடி ஒழுங்கை, ''இராஜேஸ் இல்லம்'' சுதுமலை வடக்கு, மானிப்பாய் [69512)

சாவகச்சேரி கண்டி வீதி, இலங்கைவங்கிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட நான்கு கடைகளும் மேல்மாடி வீடும் விற்பனைக்கு உண்டு. தனித்தனியே பிரித்தும் கொடுக்கப்படும் தொடர்பு: ச. நாகராசா, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (சி/9105)

### சோதிடம்

சாதகம் எழுத பலன் அறிய விவாகப் பொருத்தம் பார்க்க கிரகதோஷம் விவாகதாமதத்திற்கு சாந்தி பரிகாரம் வெளிநாட்டு பிரயாண பாதுகாப்பு பொக்கட் யந்திரம், சகல விதமான யந்திரங்களுக்கும் நாடுங்கள்: பிரபல சோதிடர் விஸ்வப் பிரம்மஸ்ரீ மா. தங்கவேல், இல. 09, டச்சு வீதி, சாவகச்சேரி. (69532)

### காணி வற்பனைக்கு

திருநெல்வேலி Farm Schoolக்கு முன்னால் பிரதான வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- க. சிவகுமார், 114/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (69533)

### இறைச்சிக் கோழி

Broilers இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு இல 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (69555)

இறைச்சிக்கோழி புறோயிலர் மிகக் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 31 மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு), விதானைவளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். (69508)

இறைச்சிக்கோழி [Broiler விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல. 15 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம், சின்னக்கடை அருகில். [69451]

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 37/2, கச்சேரி நல்லூர் றோட், Blue Ribon Hotel அருகில் யாழ்ப்பாணம். குறிப்பு: வாடிக்கையாளருக்கு விசேட கழிவு உண்டு. (69570)

இறைச்சிகோழி (புறொயிலர்) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் கிடைக்கும். (காலை தொடக்கம் மாலை வரையும்) Lucky, Palaly Road Tairunelvely. [69494]

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். விலை 120/- மட்டுமே. தொடர்புகளுக்கு: மல்லிகாபதி ஆஸ்பத்திரி முன்பாக, மானிப்பாய், தொலைபேசி இல. 2887. [69481]

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் (பாதிக்கோழி உட்பட) சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தினமும் காலை 7 மணி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். குறைந்த விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. அததுடன் அடை முட்டையும் வாழைக்குட்டிகளும் 10/-) விற்பனைக்கு உணடு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முதிரைச் சந்தையடி, நல்லூர். [69430]

### தேவை

அரச ஊழியரின் பிள்ளைகளை தங்கியிருந்து பராமரிப்பதற்கு 50வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில்பேசி தீர்மானிக்கலாம். விண்ணபிக்கவும்: விளம்பர இல. 954, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், (69563)

கொக்குவிலில் வசிக்கும் எனது வயதான தாயாரைப் பராமரிப்பதற்கு 50 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தேவை. தொடர்புமா. கைலாசபதி 301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (69543)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள MD90 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. விலை 40 ஆயிரம், திங்கள் காலை 11.00—4.00 வரை, V. சுந்தரலிங்கம், 37/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [69569]

கையில் கொண்டு செல்லக் கூடிய நல்ல நிலையில் உள்ள யப்பான் ஆங்கில ரைப்ரைட்டர் உடன் விற்பனைக்குண்டு R. பாலசுப்பிரமணியம் 17/1 பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (69574)

### தவறிவிட்டது

பூவிலிங்கம் தயாநிதி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (798642421V) ஆரியகுளத்துக்கும் அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 81, முள்ளி வீதி, அரியாலை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (69535)

எனது மூக்குக்கண்ணாடி பிறவுண் நிற பிளாஸ்ரிக் கேசுடன் பருத்தித்துறைக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து A.இராஜகுமாரன், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (69540)

மார்க்கண்டு மாலினி என்பவரின் விசேட அடையாள அட்டை (091502399) சுண்டுக்குளிக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து முகமாலை, பளை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (695 39)

டேவிற் சதீஸ்குமார் இல. 46, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை என்ற முகவரியுடைய எனது விசேட அடையாள அட்டை (0902008980) ஸ்ரான்லி பாடசாலைக்கும் இலந்தைக் குளம் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் 25-9-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் விலாசத்தில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும் (69542)

### தில்லை சோதிடம்

இந்தியாவில கடலங்குடியில் சோதிடக் கலையைக் கற்றவரும் திரு. ஜி. பார்த்தசாரதியின் மாணவியுமான ஸ்ரீ அன்புஜெயவதனி என்பவரிடம் ஜாதகம் பார்த்தல், ஜாதகம் எழுதுதல், திருமணப் பொருத்தங்கள் பார்த்தல் போன்றவற்றை பார்த்து உங்கள் வாழ்வு நலம் பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அ. தில்லையம்பலம், (கரைப்பிட்டி விநாயகர் கோயில் அருகில்) அராலி தெற்கு, அராலி. (69288)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

அல்சேசன், டோமன் கலப்பின பூச்சி நீக்கப்பட்ட, தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட பயிற்றப்பட்ட ஒரு வயது நிரம்பிய நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு ஏ.சி. துரைசிங்கம், சிவன் வீதி, ஆவரங்கால். [69483]

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப சைவபோசனம் உள்ள 36 வயதுடைய உத்தராடம் செவ்வாய் 32 பாவமும் எல்லாமாக 70 பாவம் உள்ள மணமகளுக்கு அரசாங்க உத்தியோகம் அல்லது தனியார் நிறுவனங்களில் கடமை புரியும் மணமகன் தேவை. தொடர்பு: செ. விஜயரத்தினம், முருகன் திருமண சேவை நவாலி கிழக்கு, மானிப்பாய். [69544]

### A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பழைய தூய பிரயோக கணிதம் பயிற்சி பெற்று பல வருடங்களாகக் கற்பித்து வரும் ஆசிரியரினால் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: 3மணிக்குப்பின் R. பாலசுப்பிரமணியம்B.Sc. (Cey) Dip in Ed 17/1, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (69573)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி முதல் ஒரு மணி வரை இருதய சத்திர சிகிச்சை தொடர்பான வீடியோப்படக்காட்சி இடம்பெற உள்ளது.

1991 ஆம் ஆண்டு புட்டபர்த்தியில் ஸ்தாபிக்கப்பட்ட அதிநவீன இலவச மருத்துவ மனையில் இடம் பெறும் சத்திரசிகிச்சைகளின் வீடியோத் தொகுப்பே காண்பிக்கப்பட உள்ளது. (ஐ)

## வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக். 3

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் மீண்டும் யோகாசன வகுப்புக்கள் ஆரம்பமாகி உளளன.

வெள்ளி, சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை ஆண், பெண் இருபாலாருக்கும் வகுப்புகள் நடைபெறுகின்றன (ஐ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி **சுகந்தினி சிறிஸ்கந்தராசா**

(உயர்தரப்பிரிவு [வர்த்தகம் — 97] மாணவி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

உதயம் 22-10-1978 | அஸ்தமனம் 13-10-1998

முதலாம் ஆண்டுத் திதி: 03-10-1999

ஓராண்டு காலம்.........

ஓராண்டு காலம் உருண்டு மறைந்தாலும்
உன் உயிர்மூச்சு மறைவதில்லை!
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒளிந்தாலும்
உன் நினைவுகள் ஓய்வதில்லை!
சொந்த பந்தம் வருவதில்லை!
சொத்து சுகம் நிலைப்பதில்லை!
கண்மணியே உன் நினைவே
கடைசிவரை வரவேண்டும்!

419, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர். [69572]


**கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!** **ஹோட்டல் சீவம்ஸ்**

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்துவரும் ஒரே ஸ்தாபனம்

**ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்

கொழும்பில் தங்குவதற்கு ஏற்ற மிகச் சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச் சாலையுடன் அமைந்த ஒரே இடம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்:

**HOTEL SEIVAMS [ GUEST HOUSE ]** No. 29A, SANGAMITHA MAWATHA, KOTAHENA. COLOMBO - 13.

T. P. No. 356522 (69575)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஒக். 3

பட்டதாரி ஆசிரியர் வாண்மை விருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் அதிபர் தரத்துக்கான போட்டிப் பரீட்சை தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று காலை 8-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மேற்படி அமைப்பின் தலைவர் பா.தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## விமானப் பயண
# பாதுகாப்பு அனுமதி
# வழங்கப்பட்டோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

செப்ரெம்பர் 25 ஆம் திகதி வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

இதன் ஒரு பகுதி கடந்த வெள்ளிக்கிழமை உதயனில் பிரசுரமாகியது.

### ஊர்காவற்றுறை

(எஸ். எல். என்.11633ஏ), [எஸ். எல். என். 11666ஏ], [எஸ். எல். என். 11919ஏ], [எஸ். எல். என். 11998ஏ), [எஸ். எல். என். 11999ஏ], [எஸ். எல். என். 12042ஏ], [எஸ். எல். என். 12042பி]. [எஸ். எல். என். 12044ஏ], [எஸ். எல். என். 12055ஏ] [எஸ். எல். என். 12055பி), [எஸ். எல். என். 12055சி), [எஸ். எல். என். 12058ஏ], (எஸ்.எல்.என். 12058பி), (எஸ். எல். என். 12077ஏ[, (எஸ். எல். என். 12077பி), [எஸ். எல். என். 12090ஏ], [எஸ். எல். என். 12097ஏ[, (எஸ். எல். என். 12097பி], [எஸ். எல். என். 12099ஏ], (எஸ். எல். என். 12099பி), (எஸ். எல். என். 12099சி], [எஸ். எல். என், 12101ஏ],

### கோப்பாய்

[116316ஏ], [116316பி], [116317ஏ], [116323ஏ], [116386ஏ], [116404ஏ], [116404பி], [116404சி], [116700ஏ], [116700பி[, [116700சி], [115700டி], [1,6700ஈ], [116952ஏ], [119544ஏ], [119610ஏ], [119610பி], [119610சி], [119610டி].

### நல்லூர்

(090461 ஏ). (099460 ஏ), (099462 ஏ), (104210 ஏ), (104212ஏ), (104248 ஏ), (104345 ஏ), (104357 ஏ), (104377 ஏ), (109861 ஏ), (109899 ஏ), (109929 ஏ), (109931 ஏ), (109950 பி), (109957 ஏ), (109960 ஏ), (110119 ஏ), (110119 பி), (110119 சி), (110209 ஏ), (110276 ஏ), (110277 ஏ), (110288 ஏ), (110296 ஏ), (110317 ஏ), (109963 ஏ), [116321ஏ], [116383ஏ[, [116385ஏ], [116391ஏ], [116391பி], [116394ஏ[, [116394பி], [116396ஏ], [116398ஏ], [117486ஏ], [117495ஏ], [117495பி[, [117613ஏ], [117620ஏ], [117625ஏ]. [117628ஏ], [119612ஏ], [119663ஏ[, [116047ஏ], [113918ஏ], [117888ஏ[, [118072பி], [119676ஏ], [119720ஏ], [119720பி], [119720சி], (120276ஏ), [112834ஏ), (117052ஏ). (117052 பி), (117053 ஏ), (117164 ஏ), (117271 ஏ), (117295 ஏ), (117394 ஏ), (118360 ஏ).

### பளை

(116446 ஏ), (116446 பி), (116446 சி), (116446 டி), (116447 ஏ), (116447 பி), (116450 ஏ), (116450 பி), (116457 ஏ), (116458 ஏ), (116458 பி), (116458 சி), (116458 டி).

### பருத்தித்துறை

[108306ஏ], [108366ஏ], [108367ஏ], ]111364ஏ], [113515ஏ], [113639ஏ], [113639பி[, [115160ஏ], [111264ஏ], [111264பி[, [111266ஏ], [111283ஏ], [111399ஏ], [111672ஏ]. [111265ஏ], [113356ஏ], [113554ஏ], [113634ஏ], [113679ஏ], [113699ஏ[, [113699பி], [113699சி], [113699டி]. [113743ஏ], [115097ஏ], [115097பி], [115159ஏ], (115159பி), (115170ஏ), (115272ஏ), (115272பி), (115272சி). (115275ஏ), (115389ஏ), (115389பி), (115447ஏ), (115458ஏ), (115458பி), (115458சி), (115574ஏ), (118697ஏ), (118698எ), (118698பி), (118700ஏ), (118718ஏ), (118718பி), (118721ஏ), (118782ஏ), (118793ஏ), (118798ஏ), (118824ஏ), (118832ஏ), (118849ஏ), [118849பி], [118934ஏ], [119013ஏ], [119061ஏ], [119089ஏ], [119133ஏ], [119831ஏ], [119844ஏ], [119927ஏ].

### சண்டிலிப்பாய்

[114759ஏ], [114759பி], (114759சி), (116995ஏ), (116995பி), (117113ஏ), (117113பி), (117113சி), (117185ஏ), [117185பி], (117265ஏ), (117320ஏ), [117320பி], (117367ஏ) (117435ஏ). (117459ஏ), (117460ஏ), (118454ஏ).

### தெல்லிப்பழை

[116978 ஏ], [117051 ஏ], [117051பி], [117051சி], [117051டி], [117360ஏ], [117390ஏ], [117391ஏ], [117391பி], [118361ஏ],

### உடுவில்

[111038ஏ], [111038பி[, [113465ஏ], [114870ஏ], [114870பி], [114885ஏ], [114885பி], [117087ஏ], [117102ஏ], [117103ஏ], [117104ஏ], [117195ஏ], [117195பி], [117280ஏ], ]117330ஏ], [117331ஏ], [117331பி], [117331சி], ]117369ஏ], [117393ஏ]. [117425பி], [117425சி], [117425டி], [118323ஏ], [118435ஏ], [118474ஏ].

### வேலணை

(எஸ். எல். என்.10959ஏ), ]எஸ். எல், என். 10959பி], [எஸ். எல். என். 10959சி], [எஸ், எல். என். 12062ஏ], [எஸ். எல். என். 12062பி], [எஸ், எல். என், 12062சி], [எஸ். எல் என். 12066ஏ], [எஸ். எல், என். 12066பி[, [எஸ். எல். என். 12066சி], [எஸ். எல். என். 12066டி], [எஸ். எல். என். 12067ஏ], [எஸ். எல். என். 12074ஏ], [எஸ். எல். என். 12074பி], [எஸ். எல். என். 12074சி[, [எஸ். எல். என். 12074டி], (எஸ்.எல் என். 12074ஈ), (எஸ்.எல்.என். 12075ஏ), (எஸ்.எல்.என். 12078ஏ). (எஸ.எல்.என். 12081ஏ), (எஸ.எல்.என். 12084ஏ), (எஸ்.எல்.என். 12087ஏ). (எஸ்.எல்.என். 12087பி), (எஸ்.எல்.என். 12087சி), (எஸ்.எல்.என். 12088ஏ). (எஸ்.எல்.என். 12093ஏ), (எஸ்.எல்.என். 12098ஏ), (எஸ் எல்.என். 12098பி), (எஸ்.எல்.என். 16059ஏ), (எஸ்.எல்.என். 16059பி), (எஸ்.எல்.என். 16063ஏ), (எஸ்,எல்.என். 160[illegible]), (எஸ்.எல்.என். 1665[illegible])

## நைரோபியில் இன்று இறுதி ஆட்டம்
# தென் ஆபிரிக்கா — இந்தியா மோதல்

நைரோபி, ஒக். 03

நைரோபியில் நடைபெற்று வரும் நான்கு நாடுகள் பங்குபற்றும் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் தென் ஆபிரிக்க, இந்தியஅணிகளுக்கு இடையே இன்று நடைபெறும்.

நைரோபியில் நான்கு நாடுகள் பங்குபற்றும் எல். ஜி. கிண்ணத்துக்கான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி சிம்பாப்வே அணியை 107 ஓட்டங்களால் வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியஅணித் தலைவர் அஜேய் ஜடேஜா தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இந்தியத் துடுப்பாட்டக்காரர்களின் சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களை பெற்றது. இந்திய அணி சார்பில் ஆரம்ப துடுப்பாட்டக்காரர் சௌரவ் கங்குலி 139 ஓட்டங்களையும் றொபின்சிங் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

278 ஓட்டங்களை 42 ஓவர்களில் பெற்றால் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய [illegible] அணி இந்திய அணியின் சிறப்பான பந்து வீச்சு மற்றும் களத்தடுப்புக் காரணமாக 38 3 ஓவர்களில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்திய அணியின் வெற்றிக்காக நிக்கல் சோப்றா 4 விக்கெட்டுக்களையும், இளம் வீரர் விஜய் பரத்வாஜ் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஆட்டத்தின் நாயகராக இந்திய அணியின் உதவி அணித்தலைவர் சௌரவ் கங்குலி தெரிவுசெய்யப்பட்டார்.

(இ-ரி)

# விளையாட்டரங்கு

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம். ஒக் 3

யாழ் உதைபந்தாட்ட லீக் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் லீக்முறையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழக அணியுடன் மோதும். (இ-ரி)

★ ★ ★

வடமராட்சி. ஒக் 3

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஈ. ஆர். போக்குவரத்துச் சேவை நிறுவனத்தின் ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தி வரும் வடமராட்சி ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திக்கம் மைதானத்தில் இடம் பெற உள்ள இரண்டாவது சுற்று ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு,

★ மாலை 4 மணிக்கு சிவானந்தா 'ஏ' வி: க. எதிர் அல்வாய் நண்பர்கள் 'ஏ' வி. க.

★ மாலை 5 மணிக்கு வல்வை வி. க. எதிர் பொமேர்ஸ் வி. க.

★ ★ ★

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு-

### 16 வயதுப்பிரிவு

★ கம்பர்மலை ம. வி. எதிர் ஞானாசிரியார் ம, வி. (திக்கம் மைதானத்தில்)

★ நெல்லியடி ம. வி. எதிர் கலட்டி ஆங்கி (நெல்லியடி ம. ம. வி. மைதானத்தில்)

### 18 வயதுப் பிரிவு

★ கம்பர்மலை ம.வி. எதிர் கரணவாய் ம. வி. (திக்கம் மைதானம்)

★ கொற்றாவத்தை ம. வி. எதிர் தொண்டமனாறு ம. வி. (நெல்லியடி ம ம. வி. மைதானம்) (இ-ரி)

## ஆஸ்திரேலியா 342 ஓட்டங்கள்

கொழும்பு, ஒக். 3

இலங்கை — ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டம், ஆஸ்திரேலிய அணி 342 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்த நிலையில் மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் 318 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்திருந்த ஆஸி அணி நேற்று இலங்கை அணியின் அபார பந்து வீச்சினால் மேலதிகமாக 24 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. ஆனால் ஆஸி அணியின் றிக்கி பொன்டிங் ஆட்டமிழக்காது 105 ஓட்டங்கள் பெற்றார்.

இலங்கை அணியின் பந்து வீச்சைப் பொறுத்தவரை சமிந்தவாஸ் 4 விக்கெட்டுக்களையும் முத்தையா முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும் ரங்கன ஹேரத் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டம் இன்று தொடரும்.

(இ-ரி)

## பாராட்டும் விருது வழங்கலும்

யாழ்ப்பாணம், ஒக். 3

அண்மையில் லண்டனில் நடைபெற்ற சைவமாநாட்டில் பங்குபற்றித் திரும்பியுள்ள செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் சமய, சமூகப்பணிகளைப் பாராட்டி இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயமும், இணுவையூர் மக்களும் எடுக்கும் பாராட்டு விழாவும் விருது வழங்கும் வைபவமும் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

விழாநாயகர் இணுவில் சிவன் கோயிலில் இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்படுவதுடன் பாராட்டு விழா யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க. தேவராசா தலைமையில் ஆரம்பமாகும்

ஆசியுரை, வாழ்த்துரை, பாராட்டுரைகள் ஆகியன இடம்பெறும்.

(ஐ-3)

## சிங்கள அரசியல் மேடையில்...

(7 ஆம் பக்கத் தொடர்)

னால் அதற்கு ஆதரவு தருவதாகச் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார். சிங்கள மக்களிடையே இனவாதியாகக் கருதப்படும் இந்த அமைச்சர் அம் மக்களிடத்தில் நன்மதிப்பைப் பெற மேலுள்ள கருத்தைத் தெரிவித்திருக்கலாம். ஆனால் இந்நாட்டில் பௌத்த மதம் தோன்றுவதற்கு முன்னரே இந்துமதம் இருந்துவந்துள்ளது என்பது வரலாற்று உண்மை திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றில அவ்வாறு குறிப்பிடாவிட்டாலும் பல வரலாற்று சான்றுகள் இந்து மதத்தின் வரலாற்றை உணர்த்தியுள்ளன. இன்று சிறுபான்மை மக்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மதமாக இந்துமதம் [illegible] அதனைப் புறக்கணித்து தனியொரு மதத்துக்கு இந்நாட்டை தாரைவார்த்துக் கொடுக்க முடியாது என்பதனையும் அச்சந்தர்ப்பவாத அமைச்சர் புரிந்துகொண்டால் சரி.

அரசியல் ஒரு சுழல் சக்கரம் என்பதனை மீண்டும் தென்னிலங்கை அரசியல் மேடைகளில் காணக் கூடியதாகவுள்ளது.

தேசிய அரசொன்றை நிறுவியேனும் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருவேன் என்றும் ரணில் கூற முற்பட்டுவிட்டார். 1994 ஆண்டின் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க சிறுபான்மை மக்களை செடி கொடியாக வர்ணித்தார் ஆனால் சந்திரிகா சிறுபான்மை மக்களுக்கு மதிப்பளிப்பதாகவும் அவர்களின் போராட்டத்துக்கு தீர்வு பெற்றுத் தருவதாகவும்தெரிவித்தார். இன்று அந்த நிலைமாறி முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்கவின் பாத்திரத்தை சந்திரிகாவும் அன்றைய சந்திரிகாவின் பாத்திரத்தைஇன்று ரணிலும் சிறப்பாக நடிக்கின்றனர். சினிமாவைப் பார்த்து கரகோஷமிடுவதனைப்போல் மக்களும் மேடைப் பேச்சுகளுக்கு செவிசாய்க்கின்றனர்.

பல வருடங்களாக எமது நாட்டு அரசியல் வாதிகள் மேடைகளில் பொய் முகத்தையும் செயல்களில் உண்மை முகத்தையும்காட்டி மக்களின் பெறுமதி மிக்க வாக்குகளைப் பெற்று மக்கள் பெறுமதியாக எண்ணும் சுமாதானத்துடன் கூடிய சுபீட்சத்தைப் பெற்றுதர மறுக்கின்றார்கள். வாக்காளர்களும் பொய் முகம் தரித்தாலும் இவர்கள் திருந்துவார்கள் என்று எண்ண முடியாத நிலையே உள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவிருக்கின்றதா!

நாளை
காலை 9 மணி

A/L Day Class
ஆரம்பமாகின்றது.

பொருளியற்
கல்லூரி

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(69601)

எமது புதிய ஓடியோ
C. D. வெளியீடு

- ஆசையில் ஓர் கடிதம்
- அன்பே டயானா
- புரட்சிக்காரன்
- நானும் காதலிக்கிறேன்
- ஊட்டி
- மானசீகக் காதல்
- காமெடியர் தினம்
- உனக்காக எல்லாம் உனக்காக
- நேசம் புதுசு

ஓடியன்
மியூசிக் சென்ரர்
இல.260, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டி,
(69591)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 3

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தின் மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு நடத்தப்படும் தொடர் சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு சைவப் புலவர் கா. கமலநாதன் 'பெரிய புராணத்தில் தொண்டு'' என்ற பொருளில் உரையாற்றுவார்.

நாளை திங்கட்கிழமை திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் 'பெரிய புராணத்தில் பக்தி'' என்ற பொருளில் உரை நிகழ்த்துவார். (ஐ-7)

எமது வீடியோ CD
வெளியீடு!

உனக்காக
எல்லாம்
உனக்காக

அடுத்த வீடியோ CD
வெளியீடு!

மனம்
விரும்புதே
உன்னை

ஆர்க்
வீடியோ லைபிறறி
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9167)

## ஊர்காவலர்...

[முதலாம் பக்கத் தொடர்]

காவல்படை வீரரே காயம் அடைந்தவராவார். இவர் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கடந்த......

[முதலாம் பக்கத் தொடர்]

அயராது உழைப்பதே எமது நோக்கம்.

இதற்காக எமது இயக்கம் முழுமையாகப் பாடுபடும்.

புளொட் இயக்கத்தில் உள் முரண்பாடுகள் இருந்தன என்பது உண்மைதான். ஆனால் இதனை தற்பெசமுது இல்லாமல் செய்து வருகின்றோம்,

மாணிக்கதாசன் கொல்லப்பட்ட பின்னர், முரண்பாடுகள் காரணமாக இயக்கத்திலிருந்த சிலர் விரும்பத்தகாத செயல்களை செய்வதற்கு முயன்றனர். எனினும் தகுந்த வேளையில் இது தடுத்து நிறுத்தப்பட்டது.

புளொட்டுக்குள் இருந்த பிரச்சினைகள் அனைத்தும் தற்பொழுது சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளதுடன் சில காலமாக செயற்படாமலிருந்த கட்சியின் மத்திய குழுவும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இயக்க நடவடிக்கை முழுவதும் மத்திய குழுவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

எமது அமைப்பிலிருந்தவர்களில் ஜெகன், ஜீவா ஆகிய இருவரைத் தவிர வேறு எவரும் தலைமறைவாகவில்லை. தவறான நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது என்பதற்காகவும் பாதுகாப்புக்காகவும் ஐந்து பேர் மட்டும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எவருக்கும் எந்தவிதபாதிப்பும் ஏற்படமாட்டாது ஹரி பாபு லிசா ரணையின் பின்னர் விடுவிக்கப் படுவார்.

சகலருக்கும் உதவும் வகையிலே புளொட் அமைப்பு செயற்படும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5-164

## யுத்தத்துக்கு......

(முதலாம் பக்கத் தொடர்)

டத்தில் 'யுத்தத்தை நிறுத்து' 'சமாதானத்தை உருவாக்கு' 'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்' ஆகிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள்காணப்பட்டனர்.

இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஐ. நா. சபை மத்தியஸ்தமோ அல்லது ஏனைய நாடுகளின் உதவியோ தேவையில்லை என்று அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்த கருத்துக்களுக்கு இந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை வகித்த ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் மனோ கணேசன், புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இந்தக் கூற்றை அவர் வாபஸ் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். (இ-5)

## மன்னாரில்......

(முதலாம் பக்கத் தொடர்)

ஊர்வலத்துக்கான அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து புனித செபஸ்தியர் ஆலயத்தில் அரச அதிபரை விடுதலை செய்யக்கோரி பிரார்த்தனை வழிபாட்டுப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு மேற்படி அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ளன. (இ-6)

## சோதனை......

(முதலாம் பக்கத் தொடர்)

நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

தாக்குதல் நடத்திய பின்னர் விடுதலைப் புலிகள் அங்கிருந்த 'எல்வ்' வான் ஒன்றில் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும்—

பின்னர் அந்த வான் அன்புவழிபுரம் என்ற இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாகவும் —

பொலீஸார் தெரிவித்தனர்

தாக்குதலை அடுத்து பொலீஸாரும் படையினரும் அந்தப் பகுதியில் தீவிர தேடுதல்களை நடத்தினர்.

இந்தத் தேடுதல்களின் போது வான் உரிமையாளர் உட்பட மூவர் படையினரால் கைது செய்யப்பட்டனர். (இ-6-5-21)

## முல்லைத்தீவு......

[முதலாம் பக்கத் தொடர்]

போது விடுதலைப் புலிகளின் வள்ளங்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதாகவும் — புலிகளின் வள்ளம் ஒன்று தம்மால் மூழ்கடிக்கப்பட்டதாகவும் —

தமது தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும்— கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் கடும் சமர் இடம்பெற்றதாகவும் —

இந்தச் சமரில் கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை என்றும் புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு தெரிவித்தது. (இ-5-6-21)

## காட்டுக்குள்...

[முதலாம் பக்கத் தொடர்]

இந்த எலும்புக்கூடுகளுடன் இருந்த ஆடைகள் இவர்களுடையவை என உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. (இ-5)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக். 3

இரண்டாயிரமாம் ஆண்டில் பாடசாலைகளில் தரம் II இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க இருக்கும் வள ஆளணியினருக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை வரை யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வி நிறுவகமும் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளன.

வலிகாமம், யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும், ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியர்களையும் இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-6)

## இறுதிக்கிரியை...

(முதலாம் பக்கத் தொடர்)

தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொள்வர் எனவும் -

அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பொதுமக்கள் எவரையும் அப்பகுதிக்குள் அனுமதிப்பதைத் தடுக்கும் நோக்கத்துடனேயே தடை விதிக்கப்பட்டதாகவும் —படையினர் மேலும் தெரிவித்தனர்.

இன்றைய கொண்டாட்டங்களில் வடக்கு — கிழக்கு யுத்தத்தில் கொல்லப்பட்ட படையினரை நினைவு கூரும் சிறப்பு நிகழ்வுகள் கனத்தையில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

## போராட்டம்...

[முதலாம் பக்கத் தொடர்]

உறுதிமொழியை நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. அமைப்பின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா வழங்கியதைத் தொடர்ந்தே தமது போராட்டத்தை கைவிட்டுள்ளதாக பகுதி நேர் ஆங்கில ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதையடுத்து பகுதி நேர ஆசிரியர்கள் அனைவரும் நாளை திங்கட்கிழமை தொடக்கம் கடமைக்குத் திரும்புவார்கள் என்றும் மேற்படி சங்கம் அறிவித்துள்ளது. (இ-5)

## சுதந்திரக்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

குண்டு வீசியவர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் சுமார் 30 நிமிட நேரம் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுத் தாக்குதலின் போது அமைப்பாளரும் அவரது குடும்பத்தினரும் வீட்டிலிருந்த போதும் காயம் எதுவும் இன்றித் தப்பினர். எனினும் அமைப்பாளரின் வாகனமும் வீடும் சிறிது சேதமடைந்தன.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதியில்பொலீஸார் தேடுதல் நடத்திய போது வலது கரம் துண்டிக்கப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த இளைஞர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த அர்ச்சுனன் என்றும் இவர் தான் வைத்திருந்த கைக்குண்டை தனது மார்பில் வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இவரது சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. (இ-5-21)

இலங்கை இந்து மதகுருமார் ஒன்றியம்
பெயர் மாற்றம்

கடந்த 9 ஆண்டுகளாக செயலாற்றி வந்த
"இலங்கை இந்து மதகுருமார் ஒன்றியம்"
23 - 9 - 1999 முதல்
"சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்
அகில இலங்கை"
என்ற பெயருடன் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக் கிளை:-
திரு. சிவஸ்ரீ ஜெ. பாலசுப்பிரமணியக் குருக்கள்
இல:- 98, ஜிந்துப்பிட்டி தெரு,
கொழும்பு 13, இலங்கை.

என்ற முகவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தலைமைச்செயலகம் அறிவிக்கின்றது.

மேலும் இந்த அமைப்பின்
வடமராட்சி, தென்மராட்சிக் கிளைகளும்
சர்வதேசரீதியில் இயங்குவதற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

நன்றி.

பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகர சர்மா
''பொதுச் செயலாளர்''
இலங்கை இந்து மத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.

தலைமைச் செயலகம்:-
இல:- 74, பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம், இலங்கை.
(69602)

ஒக்ரோபர் 10 - உலக உள நல நாள்

முதுமை என்பதோர் அழகினைப் போற்றுவோம்!

முதுமை-

வாழ்வின் இரண்டாம் பிள்ளைப் பராயம். எனவே பிள்ளை போல் பிறரின் அன்புக்காக இவரும் ஏங்குவர். அரவணைப்பு ஆதரவால் ஆனந்தத்துள் திளைப்பர். அன்பு செலுத்த ஒரு சிலர் இருந்தால் தென்புடன் வாழ்வர்.

அன்னவரோடு அன்பாய் இருப்போம்
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்

அகவொளி உளநலச் சங்கம் சுகவாழ்வு சாந்திகம்.

கலந்துரையாடல்

யாழ்/ பல்கலைக்கழக 2 ஆம் வருட பொருளியல் துறை மாணவர்களுக்கான முக்கிய விடயம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற உள்ளதால் அனைத்து 2 ஆம் வருட பொருளியல்துறை மாணவர்களும் கலந்து கொள்ளவும்.

இடம்: பொருளியல்துறை மண்டபம்
நாள்: 04 - 10 - 1999 (திங்கள்)
நேரம்: பி. ப 3.00 மணி

மாணவப் பிரதிநிதி
2 ஆம் வருடம் பொருளியல் துறை
(69592)

இப் பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-10-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org